பகுப்பும் தொகுப்பும்
முனைவர் சு இராமலிங்கம்

108

செந்தமிழறிஞர்கள்

ISBN : 978-81-686742-3-3





தி இலக்குமணார்

NSR 100 Educational Trust
[An ISO 9001 - 2015 Certified]
AD-13,5th Street, Anna Nagar West, Chennai - 600 040
www.nasubbureddiar100.in

https://www.annacentenarylibrary.org/pages/view/21-%E0%AE%A4%E0%AE%BF%E0%AE%87%E0%AE%B2%E0%AE%95%E0%AF%8D%E0%AE%95%E0%AF%81%E0%AE%AE%E0%AE%A3%E0%AE%BE%E0%AE%B0%E0%AF%8D_1864

செந்தமிழ்சிறப்பிகள்

தி இலக்குமணார் (1864-1950)



தி.இலக்குமணார் (1864-1950)

திருநெல்வேலியிலிருந்து திருவிதாங்கூருக்குக் குடிபெயர்ந்த ஒரு பாரம்பரியமிக்க வேளாளக் குடும்பத்தில் 1864இல் பிறந்தவர் தி. லக்ஷ்மண பிள்ளை. வடமொழிச் சொற்களை வேண்டுமானால் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று 1889இல் கருதிய இவர்தான் பின்னாளில் தம் பெயரை இலக்குமண பிள்ளை என்று தமிழ் படுத்திக் கொண்டார்.

பி.ஏ. பட்டம் பெற்ற இலக்குமண பிள்ளை, கணக்கியலில் பயிற்சி பெறச் சென்னைக்குச் சென்றபொழுது பூண்டி அரங்கநாத முதலியார், டி.வி. சேஷகிரி சாஸ்திரி முதலானோரின் தொடர்பு ஏற்பட்டது. திருவிதாங்கூர் அரசில் Major Treasury Officer ஆக உயர்பதவி பெற்று ஓய்வு பெற்றார். திருவிதாங்கூர் சட்டமன்றத்திலும் உறுப்பினராக இருந்திருக்கிறார்.

தமிழ் மற்றும் பணி

- Iambic pentametre என்ற ஆங்கிலப் பா வடிவுக்கு ஈடான தமிழ் பா வடிவம் இல்லை என்றுகருதி, ‘கட்டளைக் கலித்துறையை எதுகை மோனைகளை நீக்கி அமைத்தார்’ என்று வையாபுரிப்பிள்ளை குறிப்பிடுகிறார்.
- 1930களில் இ.மு. சுப்பிரமணிய பிள்ளை தலைமையில் அமைந்த தமிழ் வேர்ச் சொற்களின் அடிப்படையில் வடமொழி தவிர்த்த கலைச் சொல்லாக்க முயற்சிகளிலும் அவர் ஈடுபட்டிருக்கிறார்.
- இருப்பினும் இன்று தி. இலக்குமண பிள்ளை பெரிதும் அறியப்படுவது அவர் இசைத் தமிழுக்கு ஆற்றிய தொண்டுகளுக்காகவே.
- 'தமிழ் பயில் சங்கம்', 'கான சமாசம்' முதலான சங்கங்களைத் தமிழுக்காகவும், இசைக்காகவும் தொடங்கி நடத்தி வந்தார். தமிழர் சங்கம் மற்றும் தமிழ்ப் பள்ளிகளைத் தொடங்கினார்.
- தமிழில் பல கீர்த்தனங்களை இயற்றிய இவருடைய பெருமை 1930-40களில் தோன்றிய தமிழிசைக் கிளர்ச்சியின்பொழுது நன்கு அறிமுகமானது.
- தமிழ்வழிக்கல்விக்கான முயற்சிகளில் பங்கெடுத்த இலட்சுமண பிள்ளை அறிவியல், தத்துவம் சார்ந்த கலைச்சொற்களை உருவாக்குவதிலும் பங்களிப்பாற்றினார்.
- இலட்சுமணபிள்ளை திருவிதாங்கூர் சம்ஸ்தானத்தில் தமிழ்க்கல்விக்கான போராட்டத்திலும் , உயிர்க்கொலைத் தடுப்பு போராட்டத்திலும் ஈடுபட்டார். மண்டைக்காடு போன்ற ஆலயங்களில் உயிர்ப்பலி கொடுப்பதற்கு எதிராக செயல்பட்டு வெற்றி கண்டார்.

படைப்புகள்

- ‘நினைவாட்சி’ என்ற செய்யுள் நூலை எழுதியுள்ளார்.
- ‘ரவிவர்மா’ என்ற நாடக நூலை இயற்றியுள்ளார்.

மொழிபெயர்ப்பு

- கிரேக்க மொழியிலமைந்த பைலாக்டெட்டிஸ் என்ற நாடகத்தை ஆங்கிலவழியாக ‘வீல நாடகம்’ என்று மொழியாக்கினார்.

விருதுகள்/சிறப்புகள்

- வையாபுரிப் பிள்ளை, 'இசைத் தமிழ்ச் செல்வர்' என்று இவரைக் குறிப்பிடுகிறார்.

(😊)(😊)(😊) @@@@@@ (😊)(😊)(😊)

தி. இலக்குமணப்பிள்ளை (1864 - 1950) 19-20 ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த ஒரு சிறந்த தமிழறிஞர், நாடக ஆசிரியர், மற்றும் இசைத் தமிழ் ஆர்வலர் ஆவார். திருவிதாங்கூர் அரசில் பணியாற்றிய இவர், **'இசைத் தமிழ்ச் செல்வர்'** என்று போற்றப்பட்டார். தமிழில் கவிதை மற்றும் நாடக இலக்கிய வளர்ச்சிக்கு, குறிப்பாகச் செய்யுள் நாடகங்களுக்கு, இவர் ஆற்றிய பங்களிப்பு குறிப்பிடத்தக்கது.

தி. இலக்குமணப்பிள்ளை பற்றிய முக்கியக் குறிப்புகள்:

- **பிறப்பு & பின்னணி:** திருநெல்வேலியிலிருந்து திருவிதாங்கூருக்குக் குடிபெயர்ந்த குடும்பத்தில், 1864-ல் பிறந்தார். திருவனந்தபுரத்தில் கல்வி பயின்றார்.
- **கல்வி & பணி:** மகாராஜா கல்லூரியில் தத்துவத்தில் பி.ஏ. பட்டம் பெற்றார். திருவிதாங்கூர் அரசில் **Major Treasury Officer** ஆகப் பணியாற்றி ஓய்வு பெற்றார்.
- **இசைப் பணிகள்:** தமிழ் இசை இயக்கத்திற்கு ஆதரவாகச் செயல்பட்டவர். தமிழிசைப் பெருமை குறித்துப் பல கூட்டங்களில் பேசியவர். இசையறிவுமிக்கவர்.
- **இலக்கியப் பங்களிப்பு:**
  - **நாடக நூல்கள்:** 'இரவிவர்மன்', 'மான விஜயம்' போன்ற வரலாற்று மற்றும் செய்யுள் நாடகங்களை எழுதியுள்ளார்.
  - **மொழிபெயர்ப்பு:** சோபக்ளஸ் (Sophocles) இயற்றிய 'Philoctetes' என்ற நாடகத்தை 'வீல நாடகம்' என அகவற்பாவில் மொழிபெயர்த்துள்ளார்.
  - **புதுமை:** ஆங்கில 'Iambic pentametre' பா வடிவுக்கு இணையாக, கட்டளைக் கலித்துறையில் எதுகை, மோனைகளை நீக்கி எழுதும் புதுமை முறையை அறிமுகப்படுத்தினார்.

- **சிறப்புகள்:** 'இசைத் தமிழ்ச் செல்வர்' என்ற பட்டம் பெற்றவர். 1930களில் வடமொழி கலவாத தூய தமிழ்க் கலைச் சொற்களை உருவாக்குவதில் பங்களித்தார்.

இவர், தமிழிசை மற்றும் தமிழ் நாடக இலக்கியத்தின் முன்னோடிகளில் ஒருவராகத் திகழ்கிறார்.

இசைக்கல்வி

இசையின் தொடக்கக் கல்வியை விழியிழந்த பாடகரான பரவூர் பாப்பு பிள்ளையிடமிருந்து கற்றார். பின்னர் அவர் தம்பி வேலுப்பிள்ளை பாகவதரிடம் வாய்ப்பாட்டு பயின்றார். வீணை அய்யா பாகவதரிடம் வீணையிசை பயின்றார். ஆவனஞ்சேரி பிச்சு பாகவதரிடம் விரிவாக இசைபயின்றார். பிச்சு பாகவதர் தியாகையரின் மாணவரும், அரண்மனைப் பாடகர் பதவியில் இருந்தவருமான ரகுபதி பாகவதரிடமும், ராகவ பாகவதரிடமும் இசைபயின்றவர்.

தியாகையரின் மாணவரிடம் இசை பயின்றாலும் இலட்சுமணபிள்ளை தன்னை தியாகையர் மரபைச்சேர்ந்தவராகச் அடையாளப்படுத்திக் கொள்ளவில்லை. தியாகையரை அவர் ஒரு பக்திவழிபாட்டு மனநிலை இல்லாமல் ஒர் இசைமேதையாகவே அணுகுவதை இலட்சுமணப்பிள்ளையின் தன்வரலாற்றுக் குறிப்புகள் காட்டுகின்றன.

இலட்சுமணபிள்ளை தன் இல்லத்தருகே வாழ்ந்த அரண்மனை வித்வான் சாத்து பாகவதரின் வீணையிசையை ஒவ்வொரு நாளும் கேட்கும் வழக்கம் கொண்டிருந்தார். சாத்து பாகவதரின் இல்லத்துக்கு வருகைதரும் ரகுபதி பாகவதர், வடசேரி ராம பாகவதர், அப்பன்கோயில் சுப்பையா பாகவதர், மகாதேவ பாகவதர் ஆகியோரிடம் தொடர்ச்சியாக இசைக்கல்வி பெற்றதாக இலட்சுமண பிள்ளை குறிப்பிடுகிறார்.

1886-ல் தன் 21-ஆவது வயதில் இலட்சுமணபிள்ளை திருவிதாங்கூர் அரசின் சார்பில் ஆங்கிலமுறை கணக்கெழுத்து பயிலும்பொருட்டு சென்னை பிரிட்டிஷ் அரசின் தலைமைக் கணக்காயர் அலுவலகத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டார். சென்னையில் இசையறிஞர்கள் வைத்தியநாத சாஸ்திரி, சேஷகிரி சாஸ்திரி ஆகியோரின் அறிமுகம் பெற்றார். சரப சாஸ்திரியின் புல்லாங்குழலிசை, சிவக்கொழுந்து தேசிகரின் நாதஸ்வர இசை ஆகியவற்றை கேட்டு தன் இசையறிவை விரிவாக்கிக் கொண்டதாக லட்சுமணபிள்ளை குறிப்பிடுகிறார்.

திருவனந்தபுரம் திரும்பிய இலட்சுமண பிள்ளை கல்யாணகிருஷ்ணையரின் வீணையிசை, பரமேஸ்வர பாகவதரின் மைந்தர் மகாதேவ ஐயரின் வாய்ப்பாட்டு ஆகியவற்றில் ஈடுபாடு கொண்டு அவர்களிடமிருந்தும் இசை கற்றார்.

இலட்சுமண பிள்ளையை நீலகண்ட சிவம் தன் மாணவர் எனச் சொல்லும் வழக்கம் உண்டு. ஆனால் இலட்சுமண பிள்ளையின் தன்வரலாற்றுக் குறிப்புகளில் அதற்கான நேரடி ஆதாரம் இல்லை.

இசைவாழ்க்கை

இலட்சுமண பிள்ளை அவருடைய 14-ஆவது வயதில் வாதநோயால் அவதிப்பட்டபோது பந்துவராளி ராகத்தில் "திருச்செந்தூர் வேலவனே சிறியோனைக் காத்தருள்வாய்" என்ற கீர்த்தனையை இயற்றினார். ஆனால் தன் 28-ஆவது வயதில் ஒரு நீர்நிலையில் உயிரிழக்கும் தருவாயில் தப்பியதாகவும், அப்போது இறையருளை உணர்ந்ததாகவும் கூறும் இலட்சுமண பிள்ளை அதன்பின் ஏராளமான இசைப்பாடல்களை இயற்றினார். அவையே குறிப்பிடத்தக்கவை என இலட்சுமண பிள்ளை கருதினார். இலட்சுமண பிள்ளை இசை பற்றிய ஆய்வு நூல்களும் எழுதினார். 'திருவாங்கூர் இசையும் இசைவாணரும்', 'தியாகராஜா', 'திருவாங்கூர் அரசபரம்பரையும் இசையும்' அவற்றுள் குறிப்பிடத்தக்கவை.

இசைப்பாடல்கள்

இலட்சுமண பிள்ளை 80 ராகங்களில் 200-க்கும் மேற்பட்ட இசைப்பாடல்களை இயற்றியிருக்கிறார். அவற்றில் 20 ராகங்கள் மேளகர்த்தா ராகங்கள். மிக அதிகமாக தோடி ராகத்தில் பத்து பாடல்களை இயற்றியிருக்கிறார். கானடாவில் 8, பூர்விகல்யாணியில் 7. அவரே உருவாக்கிய இரண்டு ராகங்கள் ஸவிதமார்கினி, அமசேனாப்பிரியா. இலட்சுமண பிள்ளை தன் இசைப்பாடல்களை இறைவணக்கம், அறிவியல் (தத்துவம்) மற்றும் அறிவியல் (பொது) என பகுப்பு செய்துள்ளார்.

இசைநாடகங்கள்

இலட்சுமண பிள்ளை இசைநாடகங்களை இயற்றியிருக்கிறார்.வீலநாடகம், சத்தியவதி என இரு நாடகங்களை இசைநாடகங்களாக மொழியாக்கம் செய்துள்ளார். 1898-ல் வீலநாடகம் அச்சில் வெளிவந்தது. இது சோபாக்ளிஸ் *(Sophocles)* எழுதிய பிலோடெக்டஸ் *(Philoctetes)* என்னும் கிரேக்க நாடகத்தின் தழுவல். சத்தியவதி ஷேக்ஸ்பியர் எழுதிய ஸிம்பலைன்*(Cymbeline)* நாடகத்தின் தழுவல். 1906 -ல் இலட்சுமணபிள்ளையின் சொந்த நாடகமான இரவிவர்மன் அரங்கேற்றம் கண்டது. 1918-ல் அச்சேறியது.

இசைக்கல்லூரி

இலட்சுமண பிள்ளை திருவனந்தபுரத்தில் ஓர் இசைக்கல்லூரி அமைக்கும்பொருட்டு பிறரை ஒருங்கிணைத்து முன்முயற்சிகளெடுத்தார். 1926-ல் திருவனந்தபுரத்தில் கூடிய ஒரு கூட்டத்தில் மனு தயாரிக்கப்பட்டு மன்னரிடம் வழங்கப்பட்டது. 1939-ல் மியூசிக் அக்காதமி என்ற பெயரில் தொடக்கம் கண்ட அந்தக் கல்லூரில் 1962-ல் சுவாதித் திருநாள் இசைக்கல்லூரி என பெயர் பெற்றது.

Compositions of T Lakshmana Pillai a Critical Study

https://shodhganga.inflibnet.ac.in/handle/10603/143860

நூல்கள்

ஆங்கிலம்

Travancore music, musicians & composers

தமிழ்

நாடகங்கள்

- வீலநாடகம்
- சத்தியவதி
- இராமவர்மன்
- அருமையாள்

இசை ஆய்வு

- திருவாங்கூர் இசையும் இசைவாணரும்
- தியாகராஜா
- திருவாங்கூர் அரசபரம்பரையும் இசையும்

கவிதைகள்

- ஞானானந்தனடி மாலை 1903
- நினைவாட்சி 1904
- இயற்கைக் களிப்பு 1905
- ஆலயத்திறப்பு சிந்து
- புத்தபெருமான் சிந்து

புகழ்பெற்ற பாடல்கள்

- நின் நாமம் உச்சரித்தல் - (நீலாம்பரி - சாப்பு);
- ஈசன் அடியார் எவரோ (சக்கரவாகம் - ஆதி);
- ஞானக்கண் அன்றி நாம்- (இந்தோளம் - ஆதி);
- இந்த உலகம் ஒரு நாடகசாலை
- உள்ளம் உருக்குவதே கதம் (ஆனந்தபைரவி - ஆதி);
- ஈசனைக் காண்போமே இசையில் (மோகனம் - சாபு);
- அன்பில் ஒளிர்வதுவே கீதம் - (கேதாரம் - அதி);
- பேரின்பத்தில் - (தோடி - ஆதி)

தமிழிசை இயக்கம்

இலட்சுமண பிள்ளை தமிழிசை இயக்கத்தின் முன்னோடிகளில் ஒருவராக திகழ்ந்தார். தமிழில் இசைப்பாடல்களை எழுதியும், சுவரப்படுத்தியும் அதற்குப் பங்களிப்பாற்றினார். தேவாரம், திருவாசகம் ஆகியவற்றுக்கு இசைக்குறிப்புகள் உருவாக்கினார். தமிழிசை இயக்க தலைவர்களான தண்டபாணி தேசிகர் போன்றவர்களுடன் அணுக்கமாக இருந்தார். ராஜா. அண்ணாமலைச் செட்டியாருடனும் ஒத்துழைத்தார். இலட்சுமணபிள்ளை இசைப்பாடல்களை பொதுவான பேசுபொருள் கொண்டும் எழுதவேண்டும் என எண்ணம் கொண்டிருந்தார். அவர் பாடிய பாடல்களில் ஒன்று

வாயில்லாத மாடே உன்றன் வருத்தம் தீராரோ -அந்தோ
நீயில்லாது மனிதர் உழுது நெற்பயிர் கொள்ளாரே
தாயில்லாதவர்களும் ஒருவன் தாயாயிருப்பதுண்டே

(ராகம் பேகடா, தாளம் ஆதி)









தத்துவ நிலைபாடுகள்

தத்துவக் கல்வியின் போது லட்சுமண பிள்ளையை பெரிதும் கவர்ந்தவர் அமெரிக்க தத்துவப்பேச்சாளர் ரால்ஃப் வால்டோ எமர்சன் (Ralph Walso Emerson). அவர்மேல் கொண்ட பற்றால் பின்னாளில் அமரசேனாப் பிரியா என்னும் ராகத்தை உருவாக்கினார். திருவனந்தபுரத்தில் புன்னன் சாலையில் அமைந்த தன் இல்லத்துக்கு எமர்சன் வில்லா என்று பெயரிட்டார்.

இலட்சுமண பிள்ளையின் ஆன்மிகக் கொள்கை இராமலிங்க வள்ளலார் முன்வைத்த கொள்கைகளுக்கு மிகவும் அணுக்கமானது. உயிர்க்கொலை மறுப்பு, உருவமற்ற சோதியாக கடவுளை வழிபடுதல் ஆகியவற்றை அவர் முன்வைத்தார். அவருடைய இசைக்கீர்த்தனங்களில் தொடக்ககாலக் கீர்த்தனைகளே உருவக்கடவுளை முன்வைப்பவை. பின்னாளில் எழுதிய பாடல்களில் அருவமான தெய்வத்தையே போற்றினார்.

இலட்சுமண பிள்ளை ஹென்றி பெர்க்ஸனின் படைப்பூக்க பரிணாமக்கொள்கை (creative evolution) மீது ஆர்வம்கொண்டிருந்தார். அதை படைப்புப்புறம்பொழிவு என்று தமிழாக்கம் செய்தார்.

இலட்சுமண பிள்ளையின் கொள்கை விளக்கப் பாடல்களில் ஒன்று:

பக்தி செய்வதே சத்தியமில்லை யாகில்
முக்தியில்லை ஒரு சித்தியில்லை அருட்
சித்தியில்லை என்னிருந்துமில்லை நித்யம் (பக்தி செய்வதே)
நீற்றுக் கவசமேன் நீண்ட ருத்ராக்ஷமேன்
நீரில் மூழ்குவதேன் நின்று ஜெபிப்பதுமேன்
போற்றிப் பினைவதேன் பூப்பறித்திடுவேன்
பொய் செய்யும் கேட்டுக்கு பூச்சிடப் போவதேன்

(சுருட்டி ராகம், ஆதி தாளம்)

பிறப்பு & கல்வி

இலட்சுமண பிள்ளையின் முன்னோர் தமிழகத்தில் திருச்செந்தூரைச் சேர்ந்த சைவ வேளாளர்கள். பொ.யு. 1770-ல், கார்த்திகைத் திருநாள் ராமவர்மாவின் ஆட்சிக்காலத்தில் இலட்சுமண பிள்ளையின் தாத்தா முத்துக்குமராசாமிப் பிள்ளை திருவனந்தபுரத்தில் குடியேறினார். அதன்பின் அவர் அன்று புதிதாக உருவாகி வந்த ஆலப்புழைக்கு சென்று வணிகம் செய்தார். முத்துக்குமாரசாமி பிள்ளையின்மகன் திரவியம் பிள்ளை திருவிதாங்கூர் அரசின் வலியமேலெழுத்து என்னும் கணக்காயர் பதவி வகித்தார். அவர் மனைவி மாவேலிக்கரையைச் சேர்ந்தவர்.

இலட்சுமண பிள்ளை மே 3, 1864-ல் திரவியம் பிள்ளை-பலராமவல்லி இணையருக்கு இரண்டாவது மகனாகப் பிறந்தார். அவருடைய அண்ணன் முத்துக்குமாரசாமிப் பிள்ளை கவிஞரும் தமிழறிஞருமாக அறியப்பட்டவர். இளவரசர் மார்த்தாண்ட வர்மாவுக்கு தமிழ் கற்பித்தவர்.

லட்சுமண பிள்ளை திருவனந்தபுரத்தில் பள்ளிக்கல்வி பெற்றார்.1884-ல் மகாராஜா கல்லூரியில் தத்துவத்தில் பி.ஏ. ஆனர்ஸ் பட்டம் பெற்றார். சட்டம் பயில திருவனந்தபுரம் சட்டக்கல்லூரியில் சேர்ந்தாலும் அரசுப்பணி கிடைத்தமையால் சட்டக்கல்லூரிப் படிப்பைக் கைவிட்டார். திருவிதாங்கூர் அரசின் சார்பில் 1885-ல் சென்னையில் கணக்காயர் பயிற்சி பெற்றார்.

சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் 1934-ல் நிறுவப்பட்ட ஒரு முக்கியமான தமிழ் அமைப்பாகும். இது முக்கியமாகத் தமிழில் கலைச்சொல்லாக்கப் பணிகளில் ஈடுபட்டு, 1936-ல் 8 துறைகளில் 5300 புதிய சொற்களை வெளியிட்டது. அக்கால அரசு அமைத்த குழுவின் பணிகளைத் தொடர்ந்து, மொழித் தூய்மை காத்திடவும் கலைச்சொற்களைத் தொகுக்கவும் இச்சங்கம் பெரும் பங்காற்றியது.

முக்கியத் தகவல்கள்:

- ***நிறுவப்பட்ட ஆண்டு:*** 1934.

- **கலைச்சொல்லாக்கக் குழு:** 60 தமிழ் அறிஞர்களுடன் இணைந்து, நான்கு ஆண்டுகள் பணி செய்து 1936-ல் 5300-க்கும் மேற்பட்ட கலைச்சொற்களை வெளியிட்டது.
- **நோக்கம்:** அறிவியல், கணிதம், மருத்துவம், மற்றும் பிற துறைகளுக்குத் தமிழில் கலைச்சொற்களை உருவாக்கித் தமிழ் மொழியை வளர்ப்பது.
- **அங்கீகாரம்:** இந்தச் சங்கம் உருவாக்கிய கலைச்சொற்கள் அகராதியைத் தமிழக அரசு அங்கீகரித்து ஆணை பிறப்பித்தது.

குறிப்பு: இது 1901-ல் தொடங்கப்பட்ட மதுரைத் தமிழ்ச் சங்கத்திலிருந்து வேறுபட்டது.

https://keetru.com/index.php/2010-06-24-04-31-11/ungal-noolagam-jan21/41610-2021-02-22-06-17-18

மொழித் தூய்மை காத்திட அரசின் பணியை சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் ஏற்ற வரலாறு

சு.நரேந்திரன்



உ.வே.சாமிநாதையர



சர்.சி.பி.இராமசாமி



டி.எஸ்.சொக்கலிங்கம்

பல இடங்களில் சிதறிக் கிடக்கும் கலைச் சொற்களைத் தொகுத்து வெளியிடுவதற்கும் புதிய கலைச் சொற்களை உருவாக்கவும் அரசாங்கம் குழு ஒன்றைத் தோற்றுவித்தது.

1932இல் சென்னை அரசாங்கம் அமைத்த குழு வேதியியல், இயற்பியல், கணிதம், இயற்கை விஞ்ஞானம், உடலியலும் சுகாதாரமும், நிலவியல், வரலாறு, பொருளாதாரம், நிர்வாகம். அரசியல், குடியியல் ஆகிய துறைகள் பாடங்களுக்குக் கலைச் சொற்களை வெளியிட்டது, இக்குழுவினரால் உருவாக்கப்பட்ட கலைச் சொற்களில் வடமொழிச் சொற்களே மிகுதி. இக்காலகட்டத்தில்தான்…

அறிவியல் துறைப் பாடநூல்கள் வட்டார மொழிகளின் வாயிலாக அறிவியல் கல்வியை வழங்க அரசு முடிவெடுத்தது. இதன் தொடர்ச்சியாக 1933இல் தமிழ்ப் பயிற்றுமொழி, கலைக் களஞ்சியத் திட்டம், தமிழுக்குச் செம்மொழித் தகுதி கோரிக்கை, நாட்டுப்புறப் பாடல்கள் சேகரிப்பு ஆகிய தமிழின் வளர்முகப் பணிகள் பற்றி விவாதிக்க தமிழன்பர்கள் மாநாடு சென்னையில் கூடியது.

இம் மாநாட்டில் உ.வே.சாமிநாதைய்யர் தலைமையுரையாற்றினார். அப்பொழுது 'மொழிபெயர்ப்புகளில் சீர்மை உருவாக்க வேண்டும். புதிய கலைச் சொற்களை உருவாக்கும் பணிகளால் கால தாமதமாகும். கலைச் சொற்களை தனித் தமிழில் உருவாக்குவது இயலாத காரியம்' என்று கூறினார்.

இது தவிர தமிழில் தக்க பதங்கள் இல்லாத இடத்து வழக்கத்திலுள்ள பதங்களை உபயோகித்தல் நல்லதென்றும் தமிழ் எழுத்துக்களில் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டும் என்றும் தீர்மானங்கள் தமிழன்பர் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன.

இத்தீர்மானங்களில் உடன்பாடு இல்லாத தமிழறிஞர்கள் இ.மு.சுப்பிரமணிய பிள்ளை தலைமையில் கூடி தமிழன்பர் மாநாட்டுத் தீர்மானங்களுக்கு எதிராகக் கண்டனத் தீர்மானங்களை (7-01-1934) நிறைவேற்றினர். பிறகு இது தொடர்பாக இவர்களின்

கூட்டு முயற்சியில் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்க மாநாடு திருநெல்வேலியில் நடந்தேறியது.

அப்போது இது தமிழன்பர் மாநாட்டுக்குப் போட்டியில்லை என்று இ.மு.சுப்பிரமணியபிள்ளை அறிவித்தார். இருப்பினும் உ.வே.சா போன்றோர் முன்வைத்த வடமொழி கலைச் சொற்களையும் ஏற்றுக் கொள்ளலாம் என்ற வாதத்திற்கு எதிராக மொழித் தூய்மைவாதத்தை முன்வைத்தே சென்னை மாகாணத் தமிழ்ச் சங்க மாநாடு நடைபெற்றது.

அதன் முன்னுரையில் இக் கலைச்சொல் பட்டியலுக்கான காரணத்தை அச் சங்கம் 'சென்னை அரசினர் அரிதின் முயன்று 1932 - 33ஆம் ஆண்டுகளில் வெளியிட்டுள்ள கலைச் சொற்களால் தமிழுலகடைந்த நன்மை மிகச் சிறிதே. தமிழ்ச் சொற்கள் எனப் பேர் கொண்ட அச்சொற்கள் நூற்றுக்குத் தொண்ணூற்றிரண்டு விழுக்காடு பிற மொழிச் சொற்களாயிருக்கின்றன.

அவற்றுள் பெரும் பகுதி (84%) வட மொழிச்சொற்களையும் வடமொழிச் சொற்களுள் பெரும்பகுதி பொருத்தமற்றதாகவும் எஞ்சிய பகுதி அம்மொழி வல்லுநர்க்கும் விளங்காததாயும் இருப்பதோடு ஒலிகளும் முறைப்படி தமிழ்ப் படுத்தப்படாததால் மிக்க கரடு முரடாயிருக்கின்றன' என்று தெரிவித்தது.

இதற்கான மூலகாரணம் தனித் தமிழ் இயக்கத்தினால் வடமொழி எதிர்ப்பு தீவிரமடைந்து அவ்வியக்கத்தில் ஈடுபட்டோர்களால் இக்கால கட்டத்தில் தமிழ்க் கலைச் சொற்கள் மிகையாக உருவாக்கப் பெற்றன. பிற மொழிகளினின்றும் கடன் வாங்கித் தமிழ் மொழியை உருமாற்றி உயிரற்றதாக்கக் கூடாது. பிறமொழி ஓசை தமிழ்மொழி ஓசைக்கு மாறுபட்டது.

தமிழ் இலக்கணத்திற்கும், தமிழ் இசைக்கும் பிறமொழி ஒத்துவராது என்பது இவர்களின் கருத்து. எனவே தூய தமிழ் சொற்களைப் பயன்படுத்துதல், இலக்கியச் சொற்களை நடைமுறைக்குக் கொண்டுவருதல், வடமொழி மற்றும் ஆங்கிலச் சொற்களை, குறிப்பாக வடமொழிச் சொற்களைப் புறக்கணிப்பது ஆகியவை

இவர்களின் முக்கிய நோக்கமாகும். இதன் விளைவாகவே சிறந்த கலைச்சொல் நூல் வெளிவந்தது.

பாரதி தந்துள்ள வரைவிலக்கணத்தில் பரிபாஷை. சங்கேதம், குழுவுக்குறி என்ற மூன்று சொற்களையும், கீறீனின் பரிபாஷை, அருஞ்சொல் என்ற சொற்களையும் பெயர் கட்டியிருக்கிறது என்ற தொடரையும், பிறகு சிலர் விஞ்ஞானச் சொல் என்ற கலைச் சொல்லிற்கான சொல்லைப் பயன்படுத்திய நிலையில் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் (1930) நடத்திய கலைச் சொற்கருத்தரங்கு அதன் வெளியீடான கலைச்சொல் நூல், தனித்தமிழ் இயக்கம் - இவற்றின் பின்னணியில் இச்சொல் 'Technical Team' என்பதற்கு நிகராக உருவாக்கப்பட்டது எனலாம் (பொருள் புதிது. வளம் புதிது. இராமசுந்தரம்-1999)

இம்மாநாட்டின் எதிர்காலத் திட்டங்களில் குறிப்பிடத்தக்கவை: தாய்மொழி வழியாகவே கற்பிக்கும்படி திட்டம் செய்ய வேண்டும். கலைச் சொற்களைப் பெரும்பாலும் தமிழ்ச்சொற்களாக ஆக்கி வெளியிட வேண்டும். பயிற்று மொழியாகத் தமிழ் மொழி நடைமுறைப்படுத்த வேண்டும் என்பன. இச்சங்கத்தின் தீர்மானங்கள் கலைச் சொல்லாக்க வரலாற்றில் மொழித் தூய்மைவாதத்திற்கான அடிக்கல்லாக அமைந்தது.

இம்மாநாட்டுத் தீர்மானத்தின்படி ஓர் உட்கழகத்தை, 'சொல்லாக்கக் கழகம்' எனப் பெயரிட்டு. பணிகளைத் துறை வாரியாகத் தொடங்கியது. இக்கழகம் ஏற்கெனவே வெளியிடப்பட்ட கலைச் சொற்களைத் திருத்தம் செய்வதுடன் புதிய சொற்களையும் உருவாக்கியது. இதன் முதற் கூட்டம் 29-09-1935 அன்று திருநெல்வேலியில் இலக்குமணப்பிள்ளை தலைமையில் கூடியது.

9 நாட்கள் நடைபெற்ற இக்கூட்டத்தில் பௌதீகம், ரசாயனம், உடலியலும் நலவழியும் என்னும் துறைச் சொற்கள் ஆராயப்பட்டன. மீண்டும் 25-12-1935 முதல் 07-01-1936 வரை கூடி கணிதம்,

இயற்கை விஞ்ஞானம், நிலவியல், வரலாறு முதலிய துறைகளின் சொற்களை ஆராய்ந்தனர்.

இதனைச் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் திருப்பனந்தாள் காசிமடத் தலைவர் சாமிநாத சாமிகளின் உதவியுடன் நூலாக (1936) வெளியிட்டது. இந்நூல் எட்டு அணா விலைக்கு விற்கப்பட்டது. மேலும் இக்கலைச்சொல் பட்டியல் நூல் கல்வி நிலையத் தலைவர், துணைத் தலைமை ஆசிரியர், பேராசிரியர், ஆராய்ச்சியாளர் என 453 பல்துறை வல்லுநர்களுக்கு அனுப்பப்பட்டுத் திருத்தி வாங்கப்பட்டன.

இச்சொற்களை மீண்டும் திருத்தம் செய்து வெளியிட, மாநாடு கூட்ட முடிவு செய்து, இவைகளை விவாதிப்பதற்கென கணிதம், விவசாயம் உட்பட பல்வேறு துறைகளுக்கு ஐந்து உட்கழகங்கள் அமைக்கப்பட்டது. பூத நூல் (physics), இயைபு நூல் (chemistry), கணிதம் (Mathematics), இயற்கை நூல் (Natural Science), உடலியலும் நலவழியும் (Physiology and Hygiene), தரை நூல் (Geography), வரலாறு (History) முதலிய துறை சார்ந்த 5.300 கலைச் சொற்கள் இப்பட்டியலில் இடம்பெற்றன.

இதில் உள்ள கலைச் சொற்களைத் திருத்திச் செம்மைப்படுத்த உதவிய அறிஞர்கள், விபுலாநந்தர், இராஜாஜி (Physics), கே.எஸ்.இராமசாமி (Maths), வைத்தியநாத சுவாமி, சீனிவாச ராகவன், இ,மு,சுப்பிரமணிய பிள்ளை, டி.எஸ். வேலாயுதம்பிள்ளை, எம்.எஸ்.சபேச ஐயர் (Botany), எஸ்.ஜி.மணவாள ராமானுசம் (zoology and Physiology), தேவநேயப் பாவாணர், டி.எஸ்.நடராசப்பிள்ளை (History, Administration and Politics etc), அ.முத்தையா பிள்ளை, டி.சொக்கலிங்கம் பிள்ளை, எஸ்.வையாபுரிப்பிள்ளை, ரா.பி.சேதுப்பிள்ளை. அ.கி.பரந்தாமனார், என்.சுப்பிரமணிய ஐயர் (Geography), எஸ்.சச்சிதானந்தம் பிள்ளை (phsychology photography, Music etc). இக்குழுக்களின் பணி மாநாட்டின் பின்னரும் நடைபெற்றது.

கூட்டங்கள் சில வேளைகளில் காலை 6:30 மணிக்குத் தொடங்கி இரவு10 மணி வரை தொடர்ந்தது. இது ஆர்வத்துடன் கூடிய முயற்சியாக இருந்தது.

தமிழ்ச் சங்கத்தின் கலைச் சொல்லாக்க மாநாடு ஞாயிற்றுக் கிழமை (20-09-1936) சென்னையில் நடைபெற்றது. இம் மாநாட்டை சர்.சி.பி. இராமசாமி திறந்து வைக்க சுவாமி விபுலாநந்தர் தலைமையேற்றார். இதற்கு இராஜாஜியின் ஒத்துழைப்பும் இருந்தது.

இதில் சென்னைப் பல்கலைக்கழகம் சார்பில் எஸ்,வையாபுரிப் பிள்ளை, ரா.பி.சேதுப்பிள்ளை, இலங்கையின் மொழி பெயர்ப்பாளர் கே.எஸ்.இராமசாமி ஐயர், தென்னிந்திய ஆசிரியர் சங்க எம்.எஸ்.சபேச அய்யர், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் சார்பில் க.ப.சந்தோஷமும் கலந்து கொண்டனர்.

இம்மாநாட்டில் கலைச்சொல் பணிகளுக்காக நான்கு சிறப்புக் குழுக்கள் உருவாக்கப்பட்டன, இவைகளால் தொகுக்கப் பெற்ற சொற்களின் நூலாக்கம் 1938இல் ‘கலைச்சொறகள்’ என்ற தலைப்பில் வெளியிடப்பட்டது.

இந்நூலினை அச்சிட சென்னைப் பல்கலைக்கழகம், திருவாங்கூர் பல்கலைக்கழகம் சென்னை அரசின் முதலமைச்சர் இராஜாஜி ஆகியோர் நிதி உதவி அளித்தனர்.

இது தவிர இக்கலைச் சொல்லாக்க முயற்சிக்கு ரூ.150 முதல் ரூ.200 வரை பொதுமக்களும், கல்வியாளர்களுமாகத் தொண்ணூற்றுக்கும் மேற்பட்டோர் நிதியுதவி வழங்கினர். சுருங்கச் சொன்னால் இக்கழகம் ஒரு பொதுமக்கள் இயக்கமாக உருவெடுத்தது.

இந்நூலின் (1938) முன்னுரையில் முதலமைச்சர் இராஜாஜி “தமிழில் கலைச் சொறகளனைத்தையும் எழுதவும், விளக்கவும் முடியும் என்பதைச் சிலர் ஒப்புக் கொள்வதில்லை. இதற்கு முக்கிய காரணம் பௌதீக சாத்திர ஆராய்ச்சிக்கு வேண்டி சொறகள் புழக்கத்தில் இல்லாமையேயழிய வேறில்லை.

எந்தப் பாஷையும் அதன் வாயிலாகப் பொருள்களை விளக்க முயன்றால் ஒழிய நூல்களுக்கு வேண்டிய மொழிகளும் தொடர் மொழிகளும் அதன் கண் அமைவதில்லை. பொருள்களை எடுத்துக் கொண்டு விளக்கமுயன்றால் மொழிகள் தானாகவே அமைத்து பொங்கும்.

இவ்வாறே ஆங்கிலத்திலும் பிறமேல் நாட்டு மொழிகளிலும் கலைச் சொற்கள் உண்டாகி அம்மொழிகள் வளர்ச்சியடைந்து வருகின்றன' (கலைச்சொற்கள் 1938 முன்னுரை) என கருத்துத் தெரிவித்தார். இதில் ஒரு சிறப்பு என்னவெனில் இந்தியை கட்டாயப் பாடமாக்கிய இராஜாஜி வடசொல் கலப்புக்கு எதிர்ப்பு தெரிவித்த இச்சங்கக் குழுவில் தானும் ஓர் உறுப்பினராக இருந்து கலைச் சொற்களை உருவாக்கினார் என்பது கவனிக்கத்தக்கது.

சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தின் கலைச் சொல்லாக்க முயற்சிகளைத் தமிழில் நடந்த முதல் கலைச் சொல்லாக்க இயக்கம் எனலாம், இதற்கு முந்தைய முயற்சிகள் அனைத்திலும் இது போன்று அதிக உட்குழுக்களை அமைத்தல், கோட்பாட்டு அடிப்படையிலான கலைச் சொற்களை உருவாக்குதல், உருவாக்கிய கலைச் சொற்களைத் தரப் படுத்துவதற்காக வெளியிடுதல், வெளியிட்ட கலைச் சொற்களுக்கு வந்த மறுமொழிகளைத் தொகுத்தல், பின் மீண்டும் உட்கழகங்கள் மூலம் விவாதித்து சொற்களை உருவாக்குதல் முதலிய செயல்பாடுகள் இடம்பெற்றிருக்கவில்லை.

அப்போதைய சென்னை அரசாங்கம். சென்னைத் தமிழ்ச் சங்கம் தயாரித்த இக்கலைச் சொல் பட்டியலை பள்ளிகளில் பயன்படுத்த வேண்டும் எனப் பரிந்துரைத்தது.

தமிழகத்தில் இம் முயற்சி நடந்த இந்த நேரத்தில் உஸ்மானியா பல்கலைக்கழகம் ஒரு கலைச் சொல்லகராதியை உருது மொழியில் வெளியிட்டது. 1938இல் தமிழ் அறிவியல் நூல்களுக்கு சென்னை அரசு பா¤சளிக்கும் திட்டத்தை அறிமுகம் செய்தது.

1936ஆம் ஆண்டு வெளியிட்ட கலைச் சொல் பட்டியலில் விடுபட்டிருந்த கலைச் சொற்களுடன் பல புதிய கலைச் சொற்களும் 1938ஆம் ஆண்டு பட்டியலில் இடம் பெற்றன.

இப்பட்டியலை விலைக்கு வாங்கி அன்றைய சென்னை மாகாண அரசு அக்கால கட்டத்தில் தமிழ்ப் பகுதிகளில் வழங்கியது போற்றப்படக்கூடியது ஆகும். ஏனெனில் இதற்குக் காரணம் சென்னை மாகாண கல்விச் செயலர் மாஸ்டர் மேன்தன் குறிப்பாணை ஒன்றின் மூலம் உத்திரவிட்டதினால் ஆகும். இது ஒரு மாபெரும் வெற்றியாகக் கருதப்பட்டது.

பிறமொழிக் கலைச் சொல் ஆதரவு நிலை

1923ஆம் ஆண்டு அரசு அமைத்த கலைச் சொல்லாக்கக் குழுவில் இடம்பெற்றிருந்த தனித் தமிழ்ப் பற்றுடையவரான பா.வே.மாணிக்க நாயக்கர் கலைச் சொற்களை உருவாக்கும் போது வடமொழிச் சொல்லை அறவே தவிர்க்க வேண்டும் என்ற கொள்கையுடையவர். இவர் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்க கலைச் சொல்லாக்கத் திட்டத்தில் வடமொழிச் சொற்களை அகற்றுவதற்கான முயற்சிகளை வற்புறுத்தினார்.

இதனை அச்சங்கம் செயல்படுத்தியது. இச்சங்கத்தின் முயற்சியால் கலைச் சொல்லாக்கத்தில் வடமொழி ஆதிக்கம் படிப்படியாகக் குறையத் தொடங்கியது. நல்ல தமிழ்ச் சொற்கள் கலைச் சொற்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டன. இதே காலகட்டத்தில் இக்கருத்துக்கு மாறாக ஏ.வி.சுப்பிரமணிய அய்யர், தினமணி இதழ் ஆசிரியர் டி.எஸ்.சொக்கலிங்கம் ஆகியோர் ஆங்கிலக் கலைச் சொற்களை ஏற்றுக் கொள்வதே சரியானது என வாதிட்டனர்.

இது குறித்து கருத்து தெரிவிக்கையில் அவர்களால் கிரேக்க லத்தீன் சொற்களை ஆங்கிலேயர்கள் ஏற்றுக் கொண்டது சுட்டிக் காட்டப்பட்டது. அச்சொற்களுக்கு மாற்றுச் சொற்களை அவர்கள் உருவாக்க முயற்சிகள் எடுக்கவில்லை எனவும் அதே போல பிறமொழிச் சொற்களுக்கு இணைச் சொற்களை முதலில் தமிழில் தேடவேண்டும். இல்லையெனில் பிறமொழிச் சொற்களை அப்படியே எடுத்துக் கொள்வது சிறந்தது எனக் கூறப்பட்டது.

சொற்கள் எந்த மொழிக்கு உரியன என்று கவலைப்படத் தேவையில்லை. மக்கள் ஆங்கிலச் சொற்களையே பயன்படுத்தத் தொடங்கி விட்டார்கள். அப்படியே எடுத்துக் கொள்வது நலம்

எனவும் வற்புறுத்தப்பட்டது. இதேபோல டி.எஸ். சொக்கலிங்கம் இந்தியா முழுமைக்கும் பொதுவான ஒரு மொழியில் கலைச் சொற்கள் இருக்க வேண்டும் என்று கூறியுள்ளது வடமொழியை மனதில் கொண்டதேயாகும்.

இந்தியாவுக்கு ஒரே ஆட்சிமொழி என்ற அடிப்படையில் தமிழின் இருப்பைப் புறக்கணிக்கும் வகையில் டி.எஸ். சொக்கலிங்கம் கருத்து அமைந்துள்ளது. ஆனாலும் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் தன் நிலைப்பாட்டிலிருந்து சிறிதும் விலகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஒட்டுமொத்தமாகக் கூறவேண்டுமெனில் 1932இல் வெளிவந்த கலைச்சொல் பட்டியலுக்கு எதிராக சென்னை மாகாணத் தமிழ்ச்சங்கம் மேற்கொண்ட முயற்சி மொழி உணர்வுக்கு முதன்மை தருவதாயிற்று.

1938ஆம் ஆண்டில் உயர்நிலைப் பள்ளிகளில் தமிழ் பயிற்சி மொழியாக்கப்பட்டது. கல்விக் கொள்கைகளை சீரமைக்கும் நோக்கத்துடன் இராதாகிருஷ்ணன் கல்விக்குழு (1948-49) ஏ.எல்.முதலியார் கல்விக்குழு (1952-53), கோத்தாரி கல்விக்குழு (1964-66) ஆகிய குழுக்களை அரசு நியமித்தது. இக்குழுக்கள் உயர் கல்வியில் தாய்மொழி அல்லது தாய்மொழியே பயிற்சி மொழியாக அமையவேண்டியதன் தேவையை வலியுறுத்தின.

வடமொழி வெறுப்பு தூய தமிழ்ச் சொல்லாக்கத்திற்கு உதவியது போன்றே ஆங்கிலச் சொல் பயன்பாட்டிற்கும் காரணமாயிற்று. தமிழிலே சொல் அகப்படாதபோது வடமொழிச் சொற்களைப் பயன்படுத்துவதை விட ஆங்கிலச் சொற்களைப் பயன்படுத்தும் கோட்பாட்டிற்கு முதன்மை கிடைத்தது. பல சொற்கள் இக்கால கட்டத்தில் ஆங்கிலமாக மாறின.

சென்னை மாகாண சங்கத்தின் வெற்றி நெடுநாள் நீடிக்கவில்லை. 1939இல் காங்கிரஸ் அரசு பதவி விலகியது. ஆளுநரின் ஆலோசனையைக் கொண்ட அரசு ஆட்சிசெய்யத் தொடங்கி 8.6.1940இல் வி.எஸ்.சீனிவாச சாஸ்திரியாரின் தலைமையில் ஒரு

குழு அமைத்துக் கலைச் சொற்களைச் செம்மைப்படுத்துமாறு கேட்டுக்கொண்டது, இக்குழு தன் அறிக்கையை

24-07-1940இல் அரசுக்கு அளித்தது. இவ்வறிக்கையின் உட்பொருள் திராவிட மொழிகளுக்குச் சமஸ்கிருத வேர்களைக் கொண்டு சொற்களை ஆக்கிக் கொள்ளலாம் என்பதே ஆகும். இப்பரிந்துரை அன்றைய தமிழர்களிடையே பெருங்கிளர்ச்சியை ஏற்படுத்திவிட்டது.

25-12-1940இல் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் ஒரு பெரிய மாநாட்டைக் கூட்டியது. தி.மு.நாராயணசாமி பிள்ளை, முத்தையா செட்டியார் போன்ற பலர் இம்மாநாட்டில் பங்கேற்று அரசுக்கு தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

ஆனால் அரசு இதைக் கண்டுகொள்ளாது 26-12-1940இல் அரசு தமிழுக்கென ஓர் துணைக் குழுவை அமர்த்தியது. அக்குழுவின் உறுப்பினர்களுள் சேலம் அ.இராமசாமிக் கவுண்டர், பேரா.கே.சுவாமிநாதன், பேரா.வையாபுரிப்பிள்ளை ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

இக்குழு 15-05-1943இல் தனது அறிக்கையை அரசுக்கு அளித்தது. இச் சொற்கோவையில் பெரும் பகுதி சொற்களாக இருப்பதினாலும் தம்மை அழைக்காமலேயே சொற்கோவையை ஆக்கியளித்திருப்பதாலும் இக்குழு உறுப்பினர் அ.இராமசாமி கவுண்டர் இச்சொற்கோவையைத் தம்மால் ஏற்கவியலாது எனத் தெரிவித்தார்.

மீண்டும் மக்கள் அரசு ஏற்பட்ட பின்னர், தமிழறிஞர்களின் வேண்டுகோளின்படி ஐந்து துணைக்குழுவை ஏற்படுத்தி பழைய உறுப்பினர்களோடு சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் பரிந்துரைத்த எண்மர் கொண்ட குழுவை அமர்த்தியது.

மொழித்தூய்மையைப் போற்ற வேண்டுமென்ற கோட்பாடுடைய இப்புதிய உறுப்பினர்களோடு பேரா.வையாபுரிப் பிள்ளையும், பேரா.கே.சுவாமிநாதனும் ஒத்துழைக்கவில்லை.

அவர்கள் இருவரும் சேர்ந்து தனியாக ஒரு பட்டியலை அளித்தனர் (இது ‘A’ என்று அழைக்கப்பட்டது). இ.மு.சுப்பிரமணிய பிள்ளையும் ஏனைய பத்து அறிஞர்களும் கொண்ட குழு ஆக்கியளித்த பட்டியலும் அரசுக்கு அளிக்கப்பட்டது (இது ‘B’ என்று அழைக்கப்பட்டது). அரசு இவ்விரண்டு பட்டியல்களிலிருந்தும் சொற்களை எடுத்துக் கொண்டு ‘C’ என்ற மூன்றாவது பட்டியலை உருவாக்கி, பள்ளிகள் இப்பட்டியலைப் பின்பற்ற வேண்டும் என்று 27-01-1947இல் ஆணை பிறப்பித்தது.

இப்பட்டியல் தமிழன்பர்களுக்கு மனநிறைவை ஏற்படுத்தவில்லை. எனினும் கலைக்கதிர், தமிழ்ப்பொழில், தென்மொழி, குறள்நெறி போன்ற இதழ்களாலும், பூசா.கோ.கலைக்கல்லூரி, காரைக்குடி அழகப்பா கல்லூரி, தியாகராசர் பொறியியல் கல்லூரி போன்ற கல்லூரி மாணவர்களின் சொல்லாக்க முயற்சிகளினாலும் புதிய கலைச் சொற்கள் உருவாக்கப்பட்டன.

அதன் பிறகு அரசு தனது சொற் கோவையில் அவ்வப்போது மாற்றம் செய்து தமிழ் கலைச் சொற்களுடன் பட்டியலை வெளியிட்டது.

(சொல்லாக்கம் - இ.மறைமலை.பக்.38)

- டாக்டர் சு. நரேந்திரன்

சென்னை மாகாணத் தமிழ்ச் சங்க கலைச்சொல்லாக்கக் குழு *என்பது 1934 இல் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தால் நிறுவப்பட்ட ஒரு குழுவாகும். இக் குழு 60 தமிழ் அறிஞர்களைக் கொண்டிருந்தது. இக் குழு நான்கு ஆண்டுகள் பணி செய்து எட்டுத் துறைகளில் 5300 கலைச்சொற்களை 1936 ஆம் ஆண்டு வெளியிட்டது. தமிழில் கலைச்சொல்லாக்கதுக்கென முதலில்*

அமைக்கப்பட்ட குழுக்களில் இதுவும் ஒன்றாகும். இக் கலைச்சொற்கள் பெரும்பாலும் பிற மொழிகளில் அமைந்து இருந்ததால் பல விமர்சனங்களை எதிர்கொண்டது.

திராவிட இயக்க வரலாறு

அத்தியாயம் 6:

சென்னை மாகாண சங்கம்

https://tamil.oneindia.com/books/literature/nhm-dravida-iyakka-varalaru/chapter-6.html

ஆர்.முத்துக்குமார்

15 செப்டெம்பர் 1917 அன்று சென்னை கோகலே மண்டபத்தில் ஏராளமான பிராமணர் அல்லாத பிரமுகர்கள் திரண்டனர். கூட்டி பி. கேசவ பிள்ளை அந்தக் கூட்டத்துக்குத் தலைமை வகித்தார். காங்கிரஸ் கட்சி 1885ல் தொடங்கப்பட்டபோது அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டவர் இவர். தவிரவும், சி. கருணாகர மேனன், வி. கலியாணசுந்தர முதலியார் உள்ளிட்ட முக்கியத் தலைவர்கள் பலரும் வந்திருந்தனர். தென்னிந்திய நலவுரிமைச் சங்கம் தொடர்ந்து வளர்ந்து வருகிறது. அதன் கொடிகள் எங்கும் பறக்கத் தொடங்கிவிட்டன. காங்கிரஸ் கட்சியில் இருக்கும் பிராமணர் அல்லாத மக்களுக்கு அந்தச் சங்கத்தின் கொள்கைகள் மீது கவர்ச்சி ஏற்படத் தொடங்கியுள்ளது. அதைத் தடுத்து நிறுத்த வேண்டும். அதற்கு காங்கிரஸ் கட்சிக்கு உள்ளேயே பிராமணர் அல்லாதாரைப் பிரதிநிதித்துவம் செய்யும் வகையும் கிளை அமைப்பு ஒன்றைத் தொடங்கவேண்டும். இதுதான் அந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்ட பொருளின் சாரம்.

புதிய அமைப்பைத் தொடங்குவதன்மூலம் நிறைய காரியங்களைச் சாதிக்கலாம். காங்கிரஸ் உணர்வு கொண்ட பிராமணர் அல்லாத மக்களைக் காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே தக்கவைக்கமுடியும். தென்னிந்திய நலவுரிமைச் சங்கத்தின் வளர்ச்சியைத் தடுத்து நிறுத்தமுடியும். முக்கியமாக, பிராமணர் அல்லாத மக்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தமுடியும். இதுதான் அவர்கள் போட்ட கணக்கு. பிராமணர் அல்லாத பெருங்குடி மக்களே! நாங்கள்தான் உங்களுடைய உண்மையான பிரதிநிதிகள்! எங்களை நம்புங்கள்! எங்களை நோக்கி வாருங்கள்! பகிரங்க அழைப்பு விடுத்தனர். கூட்டம் நடந்துகொண்டிருக்கும்போதே திடீரென ஒரு கூட்டம் கோகலே மண்டபத்துக்குள் நுழைந்தது. அவர்களுக்குத் தலைமை ஏற்றவர் ஓ. கந்தசாமி செட்டியார். ஆம். வந்தவர்கள் தென்னிந்திய நலவுரிமைச் சங்கத்தினர். பழைய கடனைத் திரும்பக் கொடுக்க வந்திருந்தனர். கூச்சல். குழப்பம். விளைவு, கூட்டத்தைத் தொடர்ந்து நடத்தமுடியவில்லை. காவல்துறை வந்து நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவந்தனர்.

அதன்பிறகு 20 செப்டெம்பர் 1917 அன்று கூட்டம் மீண்டும் கூட்டப்பட்டது. அந்தக் கூட்டத்தில்தான் சென்னை மாகாண சங்கம் (Madras Presidency Association) என்ற போட்டி இயக்கம் தொடங்கப்பட்டது. Powered By உள்நோக்கங்கள் பல இருந்தாலும் வெளிப்படையாக அறிவித்தது இதைத்தான். காங்கிரஸ் நோக்கத்துக்கு முரண்படாத வகையில் தென்னாட்டு பிராமணர் அல்லாத மக்களின் நலனை நாடுவதுதான் சென்னை மாகாணச் சங்கத்தின் நோக்கம். அந்தச் சங்கத்துக்கு கூட்டி பி. கேசவ பிள்ளை தலைவர். துணைத் தலைவர்களாக லாட் கோவிந்ததாஸ், சல்லா குருசாமி செட்டியார், ஈரோடு ராமசாமி, நாகை வி. பக்கிரிசாமிப் பிள்ளை, சீர்காழி சிதம்பர முதலியார், தஞ்சை சீனிவாச பிள்ளை, ஜார்ஜ் ஜோசப் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். அமைச்சர்களாக தி.வி. கோபாலசாமி

முதலியார், குருசாமி நாயுடு, டாக்டர் வரதராஜுலு நாயுடு, சர்க்கரைச் செட்டியார், வி. கலியாண சுந்தர முதலியார் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவர்களில் ஈரோடு ராமசாமி மட்டும் வித்தியாசமானவர். அடிப்படையில் காங்கிரஸ்காரரர் அல்ல; ஆனால் காங்கிரஸ் தலைவர்களுடன் நல்ல தொடர்பு வட்டத்தை உருவாக்கி வைத்திருந்தவர். குறிப்பாக, சி. ராஜகோபாலாச்சாரியார் (ராஜாஜி), டாக்டர் அன்னிபெசண்ட், டாக்டர் வரதராஜுலு, கருணாகர மேனன் போன்ற தலைவர்களுடன் பழக்கம் உண்டு. அவர்களுடைய அழைப்பின் பேரில் காங்கிரஸ் கூட்டங்களிலும் அவ்வப்போது கலந்துகொள்வார்.

இந்த விஷயத்தை ஈரோடு ராமசாமியே தன்னுடைய சுயசரிதையில் பதிவு செய்துள்ளார். டாக்டர் வரதராஜுலு நாயுடு அவர்கள் ஜஸ்டிஸ் கட்சிக்கு எதிர்ப்பாகவும் பெசண்ட் அம்மைக்கு எதிர்ப்பாகவும் ஒரு வாரப் பேப்பர் நடத்திக்கொண்டு சந்தா சேர்க்க ஈரோட்டுக்கு வந்தார். அவருக்கு ஈரோடு கடைவீதிகளில் பல சந்தா சேர்த்துக் கொடுத்து, வீட்டில் விருந்து செய்து பெருமைப்படுத்தினேன்; என்றாலும், இண்டியன் பேட்ரியட் பத்திரிகை அடிக்கடி என்னைப் பற்றி புகழ்ந்து எழுதும். அதன் ஆசிரியர் கருணாகர மேனனுக்கு என் மீது அன்பு உண்டு. அதில், அப்போது உதவி ஆசிரியராக இருந்த ரங்கையர் எனக்கு நல்ல பழக்கமுடையவர். இந்தக் கூட்டத்தில் இருந்த என்னை டாக்டர் வரதராஜுலு நாயுடுவின் சினேகமானது பெசன்ட் அம்மைக் கூட்டத்தில் இருந்து பிரித்துவிட்டது.

இதற்கு முன்பே எனக்கும் சி.ராஜகோபாலாச்சாரியாருக்கும் அவர் வக்கீல் என்கிற முறையில் பழக்கம் இருந்தது. அவர்கள் கூப்பிடும் கூட்டங்களுக்கெல்லாம் செல்ல ஆரம்பித்தேன். இதற்கு மத்தியில் ஜஸ்டிஸ் கட்சிக்கு விரோதமாக சென்னை மாகாணச் சங்கம் என்ற பெயரால் பிராமணர் அல்லாதாருக்கென்று ஒரு சங்கம் தொடங்கி வேலைசெய்து

வந்தது. அதில் நான் அதிக பங்கெடுத்துக் கொண்டேன். பிராமணர் அல்லாத மக்களின் நலனை முன்னிட்டு தென்னிந்திய நலவுரிமைச் சங்கம் தொடங்கப்பட்டபோது அதற்குக் கண்டனம் தெரிவித்தது ஹிந்து ஏடு. அதே நோக்கம்தான் எங்களுக்கும் என்று சொல்லி தொடங்கப்பட்ட சென்னை மாகாணச் சங்கத்துக்கு வாழ்த்துரை வழங்கியது. நீதிக்கட்சியுடன் போட்டிபோட வேண்டும் என்றால் இப்படியொரு தாற்காலிக அமைப்பு அவசியம் என்று எழுதியது இந்து ஏடு. எதிர்காலத்தில் சென்னை மாகாணச் சங்கம் காங்கிரஸ் கட்சிக்குள் பிளவை ஏற்படுத்திவிடக்கூடாது, அந்தச் சங்கம் நிலைபெற்றுவிடக்கூடாது, அதன்மூலம் காங்கிரஸுக்குள் பிராமணர் அல்லாத மக்களின் செல்வாக்கு உயர்ந்துவிடக்கூடாது என்று எச்சரிப்பதுதான் 'தாற்காலிக' என்பதன் அர்த்தம்.

தென்னிந்திய நலவுரிமைச் சங்கம் எந்த அளவுக்கு காங்கிரஸ் தலைவர்களைப் பதற்றமடையச் செய்தது என்பதற்கும் போட்டி இயக்கம் தொடங்க எத்தகைய முயற்சிகளைச் செய்தனர் என்பதற்கும் சரியான ஆதாரங்களை திரு.வி. கலியாண சுந்தர முதலியார் தனது வாழ்க்கைக் குறிப்புகளில் விட்டுச் சென்றுள்ளார். ஜஸ்டிஸ் கட்சி தென்னாட்டுப் பிராமணரல்லாதாரெல்லார்க்கும் உரியதாகாது என்றும் அவருள் பெரும்பான்மையோர் காங்கிரஸ் மனப்பான்மை உடையவர் என்றும் தெளிவுசெய்தேன். காங்கிரஸ் மனப்பாண்மையுடைய பிராமணர் அல்லாதார் ஆங்காங்கே கூட்டங்கூட்டி, ஜஸ்டிஸ் கட்சி தமக்குரியதன்றென்று உலகுக்குப் புலப்படுத்த விரைதல் வேண்டுமென்று வலியுறுத்தினேன்.

அந்தப்பேச்சு பத்திரிகைகளில் வெளியாயிற்று. என் பேச்சு காங்கிரஸ் பிராமணரல்லாதாரை ஊக்கமுறச் செய்தது. தனக்கென ஒரு தனிச்சங்கம் காணத் தூண்டியது. அவ்வேளையில் நியூ இந்தியாவில் வேலைபார்த்துவந்த சபாபதிப் பிள்ளை, ஏ.எஸ். ராமுலு முதலியோர் தனிச்சங்கத்தின் அவசியத்தை வலியுறுத்தி பத்திரிகைகட்குக்

கட்டுரைகள் எழுதினர். அவைகட்கு ஆதரவு சீர்காழி சிதம்பரநாத முதலியார், தஞ்சை சீனிவாசப் பிள்ளை முதலியோரிடமிருந்து கிடைத்தது. தனிச்சங்கங்காணும் முயற்சி தி.வி. கோபால்சாமி முதலியாரால் தொடங்கப்பட்டது. சென்னை மாகாணச் சங்கம் என்ற போட்டி இயக்கம் தொடங்குவதற்கு ஒரு மாதத்துக்கு முன்பே 19 ஆகஸ்டு 1917 அன்று கோயம்புத்தூர் ஒப்பணக்காரத் தெருவில் இருக்கும் திரையரங்கு ஒன்றில் பிராமணரல்லாதார் மாநாடு நடத்தப்பட்டது. அதுதான் தென்னிந்திய நலவுரிமைச் சங்கத்தின் சார்பில் நடத்தப்பட்ட முதல் மாநாடு.

ஏற்பாடுகள் அனைத்தும் சங்கத்தின் பொறுப்பு என்றாலும் 'பிராமணர் அல்லாதார் மாநாடு' என்பதுதான் அனைத்துக்கும் பொதுப்பெயர். மாநாட்டுத் தலைமை, பி. ராமராய நிங்கார். வரவேற்புக் குழுவின் தலைவராக ஊத்துக்குளி ஜமீன்தார் எம்.ஆர். காளிங்கராயர் இருந்தார். டி.எம்.நாயர், டாக்டர் சி. நடேச முதலியார் ஆகியோரும் மாநாட்டுக்கு வந்திருந்தனர். வரவேற்புரை நிகழ்த்திய எம்.ஆர். காளிங்கராயர் தென்னிந்திய நலவுரிமைச் சங்கத்துக்கு காங்கிரஸ் தலைவர்களால் தரப்படும் குடைச்சல்கள் பற்றிப் பேசினார். இம்மகாநாடு கூட்டு முயற்சியில் நாம் ஈடுபட்டது முதல் நமது எதிரிகள் நம்மைப் பலவழிகளில் தாக்கத் தொடங்கி இருக்கிறார்கள். நம்மைப் பிற்போக்காளர் எனத் தூற்றிவருகிறார்கள். அம்மட்டோ! நாம் தேசத் துரோகிகளாம்! கெட்ட எண்ணத்துடன் இம்மகாநாட்டைக் கூட்டுகிறோமாம்! எனவே, எதிரிகளுக்கு ஒரு வார்த்தை கூற விரும்புகிறேன். உங்கள் விஷமப் பிரசாரத்தினால் எவரும் ஏமாந்து போகமாட்டார்கள். எங்கள் சமூகத்துக்கு உழைக்கவே நாங்கள் முன்வந்து இருக்கிறோம்!

எங்கள் சமூகப் பற்றினாலேயே மகாநாட்டைக் கூட்டுகிறோம். மாநாட்டுத் தலைவர் ராமராய நிங்காரின் பேச்சு விரிவாகவும் விளக்கமாகவும் இருந்தது. இந்தியர்கள் பேரால் பேசத் தமக்கே உரிமை உண்டெனப் பொக்கம் பேசும் நமது எதிரிகள் நாம்

வகுப்புவாதிகள் என்று குற்றம்சாட்டுகிறார்கள். பிராமணரே இந்திய 'நேஷன்' என்றும் பிராமணர் நலனே இந்தியரின் நலன் என்றும் சாதனை செய்து பழகிப்போன பிராமணர்கள், இந்த மகாநாடு இந்த மாகாண மக்கள் பெரும்பாலானோரின் பிரதிநிதி என்பதை மறந்துவிட்டார்கள். தாமே இந்தியாவின் பிரதிநிதி என அவர்கள் சொல்லிக் கொண்டிருந்த காலம் ஒன்று இருந்தது. அதை மறுக்க முன்வராததினால் நமக்கு ஏற்பட்ட கஷ்டம் அளவிடற்கரியது. பிராமணர் அல்லாதாராகிய நாம் ஹோம் ரூல் இயக்கத்தை ஏன் எதிர்க்கிறோம்? இப்போது சுயராஜ்ஜியம் வழங்கப்பட்டால் பிராமணரல்லாதார் நமது பழைய ஆதரவற்ற, அடிமை நிலையை அடையவும் பிரிட்டிஷார் ஸ்தானத்தில் நம்மை அடிமையாக்கிய கூட்டத்தார் அமர்ந்து நம்மை மேலும் நசுக்கவும் நேருமென்று அஞ்சியே நாம் ஹோம் ரூல் கிளர்ச்சியை இப்போது எதிர்க்கிறோம்.

பிரிட்டிஷாரின் உதவியுடன் தென்னிந்திய நலவுரிமைச் சங்கம் தொடங்கப்பட்டுள்ளது என்று காங்கிரஸ் தலைவர்கள் முன்வைத்த குற்றச்சாட்டுக்கு பதிலளிக்கும் வகையில் டி.எம். நாயர் பேசினார். பிரிட்டிஷாருக்கு உதவி அளிக்க நாம் முன் வந்திருப்பதாலேயே நமது இயக்கம் சர்க்கார் உதவியால் தோற்றுவிக்கப்பட்ட இயக்கம் எனச் சொல்லப்படுகிறது. தென்னிந்திய நலவுரிமைச் சங்க டைரக்டர்களைத் தவிர வேறு யாரும் நம் இயக்கத்தைத் தோற்றுவிக்கவில்லை. நமக்கு எவர் உதவியும் தேவையில்லை. பிறர் உதவியின்றியே நமக்கு இவ்வியக்கத்தைச் செம்மையாக நடத்த ஆற்றலுடைய அறிவாளிகள் நம்மிடையே இருக்கிறார்கள். முதல் மாநாடு முடிந்த 20 ஆகஸ்டு 1917 அன்று இங்கிலாந்தின் இந்திய அமைச்சராக இருந்த எட்வின் மாண்டேகு பிரபு லண்டன் நாடாளுமன்றத்தில் புதிய அறிவிப்பு ஒன்றை வெளியிட்டார். இந்தியாவில் பொறுப்பாட்சியைப் படிப்படியாக உருவாக்கும் நோக்கத்துடன் நிர்வாகத்தின் ஒவ்வொரு பிரிவிலும் இந்தியர்களை அதிகமாகப் பங்கெடுத்துக் கொள்ளச் செய்வதும் சுயாட்சி அமைப்புகளை வளர்ச்சியுறச் செய்வதும்தான் பிரிட்டிஷ் அரசின் கொள்கை. பிரிட்டிஷ் ஆட்சியாளர்களிடம்

இருந்து வந்த முதல் சமிக்ஞை அதுதான். அறிவிப்பின் தொடர்ச்சியாக உத்தேச அரசியல் சீர்திருத்தத்துக்குச் செயல்வடிவம் கொடுப்பதற்காக ஒரு தூதுக் குழுவுடன் இந்தியா வந்தார் எட்வின் மாண்டேகு. இந்தியப் பிரதிநிதிகள் பலரையும் சந்தித்து, கருத்துகளைக் கேட்டறிந்து, நிலைமையை நேரில் கண்டறிய இருப்பதாகவும் அறிவித்தார் மாண்டேகு. ஸ்பர்டாங்க் பேச்சு மாண்டேகுவின் அறிவிப்பு தென்னிந்திய நலவுரிமைச் சங்கத்தினரை உத்வேகம் கொள்ளச் செய்தது.

பிராமணர் அல்லாத மக்களின் கோரிக்கைகள், உரிமைகள் பற்றித் தீவிரமாக விவாதிக்கத் தொடங்கினர். அந்த எண்ணம் 7 அக்டோபர் 1917 அன்று சென்னை ஸ்பர்டாங்க் சாலைப் பகுதியில் நடந்த தென்னிந்திய நலவுரிமைச் சங்கப் பொதுக்கூட்டத்தில் எதிரொலித்தது. ஆதி திராவிடர் சமுதாயத்தைச் சேர்ந்த முக்கியத் தலைவர்களான எம்.சி.ராஜா மற்றும் ஜான் ரத்தினம் இருவரும் ஏற்பாடு செய்த அந்தக் கூட்டத்தில் பேசிய டி.எம். நாயர், என் ஆதி திராவிடத் தோழர்களே! தோழியர்களே என்று தொடங்கினார். அந்த உரையில் இருந்து சில பகுதிகள்: உங்களை ஆதிதிராவிடர்களென பெருமையோடு விளித்தேன். காரணம்; இந்நாட்டில் இரண்டு இனங்களுண்டு. ஒன்று, இந்த நாட்டின் சொந்தக்காரர்கள் இனமான திராவிடர் இனம். மற்றொன்று, நாம் அசட்டையாகத் தூங்கிக் கொண்டு இருக்கும்போது வீட்டுக்குள் நுழைந்துவிடும் திருடன் போன்ற ஆரியர் இனம். ஆரிய வஞ்சகன் தன்னுடைய வெண்ணிறத்தைக் காட்டி தன்னை உயர்ந்தவன் என்றும் திராவிடர்களின் கறுப்பு நிறத்தைக் காட்டி அவனிலும் தாழ்ந்தவன் என்றும் கூறினர்.

கடவுளின் தலையிலிருந்து பிளந்து வந்தவன்தான் பிராமணன் என்றும் கடவுளின் கையில் இருந்து பிளந்து வந்தவன் சத்திரியன் என்றும் கடவுளின் இடுப்பில் இருந்து பிளந்து வந்தவன் வைசியன் என்றும் கடவுளின் காலில் இருந்து பிளந்து வந்தவன் சூத்திரன் என்றும் கூறி, திராவிட அப்பாவிகளை நம்பவைத்தனர். கடவுளின் மேற்பகுதி உறுப்புகளில் இருந்து

மகப்பேறு பெற்று வெளிவந்த ஆரியர்கள், தங்களுக்கே நாடு, வீடு, தோட்டம், துரவு, காடு, கழனி, பணம், காசு எல்லாம் சொந்தம் என்று ஆக்கிக்கொண்டுவிட்டார்கள். சூத்திரர்களும் பஞ்சமர்களும் கல்வி, சொத்துரிமை போன்றவற்றில் எந்தவொரு உரிமையும் கொண்டாட முடியாது; கொண்டாடக் கூடாது என்று ஆக்கிவிட்டனர். இவையெல்லாம் ஒவ்வொருவரின் முன் பிறப்பில் செய்த பாவ, புண்ணியங்களின் அடிப்படையில் ஏற்பட்டவை என்று ஆரிய தெய்வீகச் சட்டங்கள் கூறுகின்றன. இதற்குத் தலைவிதி என்றும் பெயர் வைத்துவிட்டார்கள். இதையெல்லாம் நம்பி நடப்பவனுக்குத்தான் இறப்புக்குப் பின் மோட்சம் கிடைக்கும் என்றும் நம்பாதவன் இறப்புக்குப் பின் நரகத்தில் சித்திரவதை செய்யப்படுவான் என்றும் சொல்லிவைத்தார்கள். இத்தகைய கடவுள் திட்டத்துக்கு வர்ணாசிரமத் தர்மம் என்று பெயர்.

ஆரியர்கள், திராவிடர்களிலேயே சிலருக்கு மட்டும் சாதி உயர்வுப் பட்டம் அளித்து, மற்றவர்களை வேறுபடுத்தித் தாழ்த்தி வைக்க முற்பட்டனர். திராவிடர்களான நெசவாளர்களை தேவாங்கப் பிராமணர் என்றும் விவசாயிகளை வன்னியகுல சத்திரியர் என்றும் நாயுடு மற்றும் ரெட்டியார்களை கௌரவ சத்திரியர் என்றும் திராவிடக் கோமுட்டிகளை ஆரிய வைசியர் என்றும் நாட்டுக் கோட்டைச் செட்டியார்களை தன வைசியர் என்றும் பொற்கொல்லர்களை விஸ்வகர்ம பிராமணர் என்றும் பலவாறாகப் பெயர்களை சூட்டி, திராவிடர்களின் கோட்டைக்குள்ளேயே குத்து வெட்டு, போட்டா போட்டி, பொறாமை பொச்சரிப்பு போன்ற குழப்பங்களை ஏற்படுத்தினர். நசூத்ராய மதிமம் தத்யா என்றொரு ஸ்லோகம் இருக்கிறது. அதன் பொருள் என்னவென்றால், சூத்திரன் படிக்கக்கூடாது என்பதாகும். அப்படியானால் ‘நீ எப்படிப் படித்தாய்?’ என்று கேட்பீர்களேயானால், இந்தச் சண்டாளப் பூனைக் கண்ணன், செம்பட்டை மயிரன் ஆன வெள்ளைக்காரனுடைய யூனியன் ஜாக் கொடி அல்லவா இப்போது நாட்டில் பறக்கிறது. அதன்

தயவால்தான் நான் படித்து முன்னேறினேன். பரதர்மோ பயாவஹ என்ற ஸ்லோகத்தின் பொருள் அவனவன் சாதித் தொழிலையே அவனவன் செய்யவேண்டும். இல்லாவிட்டால் மரண தண்டனை, நரகம் போன்ற தண்டனைகள்தாம் கிடைக்கும் என்கிறது கீதை.

இதுதான் இந்தியாவின் அவலநிலை. இங்கேதான் பிரம்ம, சத்திரிய, வைசிய, சூத்திரர் என்ற ஆரிய முதலாளித்துவ வித்து அசைக்கமுடியாத அளவுக்கு ஆழமாக வேரூன்றிச் சென்றிருக்கிறது. இதனை வெட்டி வீழ்த்தி, அதில் கொதிக்கக் கொதிக்க வெந்நீர் ஊற்றி, இந்த வர்ணாசிரமம் என்னும் நச்சுமரத்தை அக்குறுவேறு, ஆணிவேறாகப் பிய்த்து எறிந்து, அழித்து ஒழிக்கவேண்டும். நமது பாமர மக்களின் கட்சியான தராசுச் சின்னம் தாங்கும் நீதிக்கட்சி என்ன சொல்கிறது? என்பதை அனைவரும் புரிந்துகொள்ளவேண்டும். படிப்பற்ற, வசதியற்ற, அரசை நடத்திச் செல்லும் அரசியல் அதிகாரமற்ற மக்களாக, 100க்கு 85 பேர்களாக உள்ள பாமர மக்களை, முதலில் கல்வி மூலமும், ஏற்றமுள்ள உயர்நிலைகளுக்கு ஆயத்தப்படுத்திவிட்டுப் பின்னர் அவர்கள் கைக்குத் தன்னாட்சி உரிமைகள் வரவேண்டும் என்று வாதாடுகிறது.

ஆனால் இப்போது காங்கிரஸ் பிராமணர்களால் கோரப்படும் தன்னாட்சியானது, நண்டைச் சுட்டு, அதற்கு நரியைக் காவல் வைப்பது போலவும், ஆட்டுக் குட்டியையும் ஓநாயையும் ஒரே பட்டியில் அடைத்துவைப்பது போலவும் ஆன சூழ்நிலையை ஏற்படுத்திவிடும் என்பது எமது கருத்து. பிட்டி தியாகராயரையும் என்னையும் ஏனையத் தலைவர்களையும் காங்கிரஸின் வஞ்சகப் பார்ப்பனர்கள், தேசத்துரோகிகள், வகுப்புவாதிகள், வெள்ளைக்காரன் வால்பிடிக்கிகள், வெள்ளைக்காரன் பூட்ஸ் காலை நக்கிகள் என்று கண்டபடி பிதற்றித் திரிகிறார்கள். வெள்ளையன் பூட்ஸில் என்ன வெல்லப் பாகையா தடவி வைத்துக் கொண்டிருக்கிறான்?

அதை நக்கிப் பார்க்க! ராமனின் செருப்பை 14 ஆண்டுகள் சிம்மாசனத்தில் வைத்து, அதற்குப் பாலாபிஷேகம், பழ அபிஷேகம், பஞ்சாமிர்த அபிஷேகம் ஆகியவற்றைச் செய்து, அவற்றை நக்கிப் பார்த்து மகிழ்ந்தவர்கள்தாம் இந்தப் பார்ப்பனரின் முன்னோர்கள். அவர்களுக்குத்தான் பூட்ஸ் ருசியும் தெரியுமேயல்லாமல், அபிஷேகத்தில் நம்பிக்கையற்ற என்னைப் போன்றவர்க்கு எப்படி பூட்ஸின் ருசி தெரியவரும்? வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வராமல் நாங்கள் ஓயமாட்டோம்! உட்கார மாட்டோம்! என்ற முழக்கத்தை எல்லோரும் எழுப்பவேண்டும். பழைய திராவிடநாடு மறுபடியும் புத்துயிர் பெறவேண்டும். இதற்கு முதற்கண் பிரசாரம் பெருகவேண்டும். மேலும் மேலும் எங்கும் பரவ வேண்டும். நமக்கு மூன்று செய்தித்தாள்கள் போதா. முந்நூறு செய்தித்தாள்கள் வேண்டும். புற்றீசல் போல அவை கிளம்பவேண்டும். திராவிடத் தோழர்களே, எல்லோரும் நீதிக்கட்சியில் சேருங்கள்! நீதிக்கட்சியின் இலட்சியம் வெற்றிப் பெறப் பாடுபடுங்கள். முடிந்தால் வாய்ப்பு ஏற்படும்போதெல்லாம் போராடுங்கள். வெற்றி நமதே. நன்றி. வணக்கம். டி.எம். நாயரின் உரைக்கு ஸ்பர்டேங் பேருரை என்று திராவிட இயக்கத் தலைவர்கள் பெயர் கொடுத்தனர். இன்னமும் அந்த உரை காங்கிரஸ் தலைவர்களால் பலமாக விமரிசிக்கப்பட்டு வருகிறது. அதற்குரிய பதிலடிகளையும் திராவிட இயக்கத் தலைவர்கள் கொடுத்துவருகின்றனர். - தொடரும்...

திராவிட இயக்க வரலாறு

அத்தியாயம் 8

டி.எம். நாயர்

https://tamil.oneindia.com/books/literature/nhm-dravida-iyakka-varalaru/chapter-8.html

அறிக்கையைப் படிக்கப் படிக்க ஏமாற்றமாக இருந்தது நீதிக்கட்சித் தலைவர்களுக்கு. எத்தனைத் தீர்க்கமான சாட்சியங்கள். எத்தனை விளக்கமான அறிக்கைகள். எதற்கும் பலனில்லாமல் போய்விட்டதே... வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வேண்டும் என்ற நம்முடைய உயிர்நாடிக் கோரிக்கையை அறிக்கை கண்டுகொள்ளவில்லையே? அதிருப்தி. பலத்த அதிருப்தி. சோர்ந்துபோய் நின்றனர் நீதிக்கட்சித் தலைவர்கள். எதிர்த்துப் பேசக்கூட வாய்ப்பில்லாத வகையில் வாய்ப்பூட்டு போடப்பட்டுள்ளதை நினைத்து வேதனைப்பட்டார் டி.எம்.நாயர். வருத்தத்தைத் துடைக்கும் நோக்கத்துடன் மூன்று நேசக்கரங்கள் நாயரை நோக்கி நீண்டன. லார்டு லாமிங்டன். லார்டு சிடென்ஹாம். லார்டு கார்மைக்கேல்.

மூவருமே இங்கிலாந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள். நாங்கள் இருக்கிறோம். கவலை வேண்டாம். விரைவில் வாய்ப்பூட்டு அகற்றப்படும். ஆவன செய்கிறோம். வாக்குறுதி கொடுத்தனர். சொன்னதைப் போலவே நாடாளுமன்றத்துக்குச் சென்று நாயரின் நிலைகுறித்துப் பேசினர். 'இந்தியாவில் உள்ள உழைக்கும் மக்களின் குறைகள், பிரச்னைகள் ஆகியவற்றை முழுமையான புரிதலுடன் பேசக்கூடியவர் டி.எம். நாயர். இங்கே இருப்பவர்கள் இந்தியர்களின் பிரச்னைகளைப் புரிந்துகொள்ள டி.எம். நாயரின் பிரசாரம் அவசியம். ஆகவே, தன்னுடைய அரசியல் கருத்துகளைச் சொல்ல எந்தத் தடையும் நாயருக்கு இருக்கக்கூடாது.' மூவர் முன்வைத்த வாதங்கள் நாயரின் வாய்ப்பூட்டைத் தகர்த்தெறிந்தன. பிராமணர் அல்லாத மக்களுக்கான உரிமைக் குரலை எழுப்ப இனி தடையேதும் இல்லை. நிமிர்ந்து உட்கார்ந்தார் நாயர். வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறையை அமல்படுத்துவதே பிராமணர் அல்லாத மக்களுக்கு விடியலைக் கொடுக்கும். இதை இங்கிலாந்து நாடாளுமன்ற

உறுப்பினர்களுக்குப் புரியவைக்க வேண்டும். புரிய வைப்பேன்.

மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் நன்றி கூறிவிட்டுத் தனது பிரசாரத்தைத் தொடங்கினார். 2 ஆகஸ்டு 1918. இங்கிலாந்து நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புக்கூட்டம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. மக்கள் (சாமானியர்கள்) சபை, பிரபுக்கள் சபை உறுப்பினர்கள் பலரும் அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர். நீதிக்கட்சியின் கொள்கைகள், கோட்பாடுகள், கோரிக்கைகள், எதிர்பார்ப்புகள் பற்றிப் பேசினார் நாயர். முக்கியமாக, மாண்டேகு செம்ஸ்போர்டு அறிக்கையில் இருக்கும் பல அம்சங்கள் வரவேற்கக்கூடியதுதான். இருப்பினும் தென்னிந்தியாவில் வாழும் பிற்படுத்தப்பட்ட சமூகங்களுக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ அடிப்படையில் சமூகநீதி வழங்க மாண்டேகு செம்ஸ்போர்டு அறிக்கை தவறிவிட்டது. அந்த அறிக்கை பிராமணர்களுக்குச் சாதகமாகவே இருக்கிறது.

அதிருப்திகள். குறைகள். பாராட்டுகள். மனத்தில் தோன்றிய அனைத்தையும் பதிவு செய்தார் நாயர். மேடைகளில் பேசுகிறோம். அரங்குகளில் பேசுகிறோம். வேறு என்ன வாய்ப்புகள் இருக்கின்றன? பத்திரிகை. லண்டனில் நிறைய பத்திரிகைகள் இருக்கின்றன. எழுதலாம் என்று முடிவெடுத்தார். எடின்பரோ ரிவியூ, டெய்லி டெலக்ராஃப், ஸ்பெக்டேட்டர் என்று பல பத்திரிகைகளில் எழுதும் வாய்ப்புகள் உருவாக்கின. உருவாக்கிக் கொண்டார். நாயர் எழுதிய கட்டுரைகளை பல பத்திரிகைகள் பிரசுரம் செய்தன. 'பிராமணர்கள் உடலுழைப்பில் ஈடுபடுவதில்லை. நூல் நூற்பதில்லை. வியர்வை சிந்தும் அடிமைகள் அவர்களுக்காக அனைத்தையும் செய்கிறார்கள். அவர்கள் தங்கள் பங்குக்கு ஆன்மிகத் துறையைப் பயிற்சி செய்தார்கள்... மாண்டேகு செம்ஸ்போர்டு

சீர்திருத்தம் அமலுக்கு வருமானால் சாதி உயர்வைப் பேணிக் காத்துவரும் பிராமணர்கள் கையில் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டு, அதன் விளைவாக மனு மீண்டும் செயல்வடிவத்துக்கு வரும் வாய்ப்புகள் உருவாகும்.'

மேடைகளிலும் பத்திரிகைகளிலும் பிராமணர் அல்லாதாரின் உரிமைகள் குறித்தும் பிராமணர்களின் ஆக்கிரமிப்புகள் குறித்தும் நாயர் முழங்கிய நாயர் லண்டன் பயணத்தை முடித்துக்கொண்டு இந்தியா திரும்பினார். சௌத்பரோ கமிட்டி 14 செப்டெம்பர் 1918. சென்னை மாகாண அரசிடம் நீதிக்கட்சி சார்பில் மனு ஒன்று தரப்பட்டது.

'தென்னிந்தியாவில் உள்ள பிராமணர் அல்லாத மக்கள் மாண்டேகு செம்ஸ்போர்டு அறிக்கை குறித்து மன நிறைவு பெறவோ அல்லது மகிழ்ச்சி அடையவோ எதுவும் இல்லை. அந்த அறிக்கை குறித்து மக்கள் பெரிதும் கவலையுடன் இருக்கிறார்கள். மக்களின் விருப்பத்தை நிறைவேற்றும் வகையில் அறிக்கை வழங்கப்படவில்லை. விருப்பத்துக்கு மாறாகச் சென்னை மாகாண மக்கள் மீது அந்த அறிக்கை திணிக்கப்பட்டுள்ளது.' எனினும், மாண்டேகு செம்ஸ்போர்டு அறிக்கையை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கான பணிகள் தொடங்கின. தொகுதிகளைப் பற்றியும் வாக்குரிமை பற்றியும் நிர்ணயிப்பதற்காக சௌத்பரோ குழுவில் சர். பிராங்ஸ்லை, சாஹேப் சதா அஃப்தாப் அகமது கான், டபிள்யு.எம்.ஹெய்லி, சுரேந்திரநாத் பானர்ஜி, வி.எஸ். சீனிவாச சாஸ்திரி, மால்கம் என். காக் ஆகியோர் உறுப்பினர்களாக இருந்தனர். குழுவின் செயலாளராக பி.சி. டேலண்ட்ஸ் நியமிக்கப்பட்டார். முக்கியத்துவம் வாய்ந்த கமிட்டியில் திடுதிப்பென பானர்ஜி, சாஸ்திரி என்ற இரண்டு பிராமணர்களைச் சேர்த்தது நீதிக்கட்சித் தலைவர்களை ஆத்திரம் கொள்ளச்செய்தது. கூடாது. அவர்கள் இருவரும் குழுவில் இடம்பெறக் கூடாது. உடனடியாக அவர்களைக் குழுவில் இருந்து அப்புறப்படுத்தவேண்டும். மேடைக்கு

மேடை ஆவேசப்பட்டனர். மாநாடு போட்டு அவர்களை நீக்கவேண்டும் என்று தீர்மானம் கொண்டுவந்தனர்.

20 அக்டோபர் 1918 அன்று தென்னிந்திய பிராமணர் அல்லாதார் சிறப்பு மாநாடு சென்னையில் நடத்தப்பட்டது. பிட்டி. தியாகராயர் அதற்குத் தலைமை வகித்தார். அதில் மாண்டேகு செம்ஸ்போர்டு அறிக்கையைக் கண்டித்துப் பேசப்பட்டது. குறிப்பாக, பிட்டி. தியாகராய செட்டியார் எடுத்துவைத்த வாதங்கள் அனலைக் கக்கின. 'பிராமணர் அல்லாதாரைப் பார்த்து நீங்கள் பெரும்பான்மையாக இருக்கிறீர்கள் என்றுகூறும் மண்டேகுவும் செம்ஸ்போர்டும் பிராமணர் அல்லாதார் இருக்கும் இடத்தைத் தேடித்திரிந்து கண்டுபிடிக்க வேண்டியுள்ள நிலையைக் கண்டும் காணாமல் இருப்பது ஏன்?... கல்வி, சமுதாயம், அரசியல், வேலைவாய்ப்பு உள்ளிட்ட துறைகளில் போதிய பங்கும் இடமும் அதிகாரமும் பெறும் வரையில் பிராமணர் அல்லாதார் தனி வாக்குரிமை பெற்றவர்களாக இருந்தே தீரவேண்டும்' இந்திய வைஸ்ராய்க்குக் கடிதம் ஒன்று எழுதப்பட்டது.

'சீனிவாச சாஸ்திரி எந்த விதத்திலாவது பிராமணர் அல்லாத மக்களுக்குப் பிரதிநிதித்துவம் வகிக்கிறார் என்று கற்பனை செய்துகொள்ளப்பட்டிருந்தால் நாங்கள் அந்த எண்ணத்தை வன்மையாக மறுக்கிறோம்... இந்தப் பிராமணர் சென்னை சட்டசபையில் உள்ள பிராமண உறுப்பினர்களால் டில்லி சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்... அவர் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கும் இந்த மாகாணத்து பிராமணர் அல்லாதாருக்கும் எந்தப் பங்கும் கிடையாது' ஜஸ்டிஸ் ஏட்டில் எழுதப்பட்ட தலையங்கங்களும் அறிக்கையைக் கண்டிக்கும் வகையில் இருந்தன. ஆனாலும் பிரிட்டிஷார் அசைந்துகொடுக்கவில்லை. நீதிக்கட்சித் தலைவர்களின் எதிர்ப்புகள் புறந்தள்ளப்பட்டன. சௌத்பரோ கமிட்டி தனது வேலைகளைத் தொடங்கியது. சென்னை மாகாணத்துக்கு வந்தபோது திவான் பகதூர் எல்.டி. சாமிக்கண்ணுப் பிள்ளை,

கடலூர் திவான் பகதூர் ஏ. சுப்பராயலு ரெட்டியார் ஆகியோரைக் குழுவில் சேர்த்துக்கொண்டு விசாரணை நடத்தத் தொடங்கியது.

நீதிக்கட்சி, சென்னை மாகாண சங்கம், சென்னை மகாஜன சபா, சென்னை மாகாண காங்கிரஸ், சென்னை மாகாண முஸ்லிம் லீக் உள்ளிட்ட அனைத்து முக்கிய அமைப்புகளுக்கும் செளத்பரோ கமிட்டி அழைப்பு அனுப்பியது. அவரவர்க்கு ஒதுக்கப்பட்ட நேரத்தில் சம்பந்தப்பட்ட பிரதிநிதிகள் சாட்சியம் அளித்துச் சென்றனர், நீதிக்கட்சியைத் தவிர. என்னுடைய அரசியல் எதிரிகளால் தீர்ப்பளிக்கப்படும் நிலைக்கு நான் என்னை ஆட்படுத்திக் கொள்ளமாட்டேன் என்று திட்டவட்டமாகச் சொன்ன டி.எம். நாயர், தனது நிலையை விளக்கி சென்னை மாகாண அரசுக்குக் கடிதம் எழுதினார்.

அதில் செளத்பரோ உள்ளிட்ட கமிட்டிகள் பகிரங்க விசாரணை நடத்தி, கூறுவோரின் கருத்துகளையும் எண்ணங்களையும் எழுத்துமூலம் குறித்துக்கொள்ளப் போவதில்லை என்பதால் அதில் வந்து சாட்சியம் அளிக்கத் தனக்கு விருப்பம் இல்லை என்றார். 11 ஜனவரி 1919ல் பிராமணர் அல்லாதாரின் இரண்டாவது மாநாடு (நீதிக்கட்சியின் ஏற்பாட்டில்) கூடியது. பிட்டி. தியாகராய செட்டியார், டி.எம். நாயர் உள்ளிட்ட முக்கியத் தலைவர்கள் பலரும் கலந்துகொண்டனர். பலத்த ஆலோசனைகளுக்குப் பிறகு இரண்டு முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன. ஒன்று, செளத்பரோ குழுவிடம் எவரும் சாட்சியம் அளிக்கக்கூடாது. மற்றொன்று, டி.எம். நாயர் தலைமையில் நீதிக்கட்சிக் குழு ஒன்று இங்கிலாந்துக்கு அனுப்பி பிராமணர் அல்லாதாரின் எண்ணங்களைத் தெள்ளத் தெளிவாகப் புரியவைக்கவேண்டும்.

அதன் தொடர்ச்சியாகவே பிட்டி. தியாகராய செட்டியார் சென்னை மாகாண அரசுக்குக் கடிதம் ஒன்றை 12 ஜனவரி

1919 அன்று எழுதினார். ஒருதலைப்பட்சமாகவும் ஒரு சாராரை ஆதரிக்கும் விதத்திலும் அரசின் தன்மை இருப்பதாலும் இந்த விஷயத்தில் பிராமணர் அல்லாதார் ஆத்திரத்துடன் தெரிவித்த கடும் கண்டனத்துக்கு அரசு மௌனம் சாதித்து வருவதாலும் பிராமணச் சிறுபான்மை ஆட்சி அமைந்திட வக்காலத்து வாங்குவோருக்கு அரசு புகழாரம் சூட்டிக் கொண்டிருப்பதாலும் தென்னிந்திய நலவுரிமைச் சங்கம் சௌத்பரோ குழுவைப் புறக்கணிக்க முடிவு செய்திருக்கிறது மாண்டேகு செம்ஸ்போர்டு அறிக்கை தொடர்பாக அனைத்து மாகாண அரசுகளும் கருத்து தெரிவிக்கவேண்டும் என்று உத்தரவிடப்பட்டிருந்தது.

அதன்படி சென்னை மாகாண அரசு தனது கருத்தைத் தெரிவித்தது. தற்போதைய சட்டமன்றத்தில் 260 லட்சம் மக்கள் தொகையைக் கொண்ட பிராமணர் அல்லாத இந்துக்கள் தற்போதைய பிரதேச வாரித் தேர்தலால் ஒரேயொரு பிரதிநிதியை மட்டுமே பெற்றுள்ளனர். ஆனால் 15 லட்சம் மக்கள் தொகையைக் கொண்டுள்ள பிராமணர்களோ 9 பிரதிநிதிகளைப் பெற்றுள்ளார்கள். நீதிக்கும் நேர்மைக்கும் பொருந்தாத இந்தத் தேர்தல் முறையானது வாக்குரிமைக் கமிட்டியினரால் நன்கு பரிசீலிக்கப்படும் என்றும் பெரும் மக்கள் தொகையைக் கொண்டுள்ள பிராமணர் அல்லாத இந்துக்கள் போதிய பிரதிநிதித்துவம் அடைந்திடும் வழிவகைகள் காணப்படும் என்று இம்மாகாண அரசாங்கம் பெரிதும் நம்புகிறது. 5 அக்டோபர் 1919 அன்று தனது அறிக்கையை வெளியிட்டது சௌத்பரோ கமிட்டி.

முஸ்லிம்கள், இந்தியக் கிறித்தவர் தவிர வேறு யாருக்கும் குறிப்பிட்ட வகுப்புத் தொகுதிகள் தேவையில்லை. தாழ்த்தப்பட்டோர் தவிர்த்த பிராமணர் அல்லாதார் மக்கள்தொகையில் பிராமணரை ஒப்பிடும்போது 22:1 என்கிற விகிதத்தில் பெரும்பான்மையாக இருக்கின்றனர். இப்போது வாக்குரிமை அளிக்கப்பட்டுள்ளவர்களைக் கணக்கில் எடுத்துக்கொண்டால் பிராமணர் அல்லாத வாக்காளர்களும் பிராமண வாக்காளர்களும் 4:1 என்ற

விகிதத்தில் இருப்பார்கள். எனவே, இந்த எண்ணிக்கைப் பெரும்பான்மையைக் கருதி பிராமணர் அல்லாதார்க்கு தனித்தொகுதி ஒதுக்கீடு முறை தேவையில்லை. பிராமணர் அல்லாதார் இதுவரை அரசியலுக்குச் செலவழித்த சக்தியை இந்தப் பெரிய பெரும்பான்மைச் சமுதாயத்தை அமைப்பு ரீதியாக ஒரு அணியில் திரட்டச் செலவிட்டிருந்தால் பிராமணர்களின் அதிகாரத்தையும் செல்வாக்கையும் மீறி அவர்கள் தங்கள் சக்தியை செயல்வடிவத்துக்குக் கொண்டுவந்திருக்கமுடியும் என்பதை எங்களால் நினைக்காமல் இருக்கமுடியவில்லை. இதுதான் சௌத்பரோ குழுவின் அறிக்கையின் சாரம்.

நீதிக்கட்சியைப் போலவே சென்னை மாகாண அரசும் சௌத்பரோ கமிட்டியின் பரிந்துரைகளை ஏற்கவில்லை. கல்வி, சமுதாயம், மதம் என்ற மூன்று விஷயங்களில் ஆதிக்கம் செலுத்துவோருக்கு முன்னால் எண்ணிக்கை பலம் என்பது ஒன்றுமே இல்லை. (அழுத்தம் ஆசிரியருடையது) சௌத்பரோ கமிட்டி இதை உணர்ந்துகொள்ளத் தவறிவிட்டது என்றது சென்னை மாகாண அரசு. டி.எம். நாயர் மரணம் மாண்டேகு செம்ஸ்போர்டு அறிக்கை மக்கள் சபை மற்றும் பிரபுக்கள் சபை உறுப்பினர்கள் அடங்கிய கூட்டுப்பொறுக்குக் குழுவுக்கு அனுப்பிவைக்கப்பட்டன. சீர்திருத்தங்களில் அதிருப்தி இருப்பவர்கள் இந்தக் குழுவில் தங்களது குறைகளை எடுத்துச்சொல்லி, அவற்றுக்குப் பரிகாரம் தேடிக்கொள்வதற்கான இறுதி வாய்ப்பு. ஆகவே, காங்கிரஸ், முஸ்லிம் லீக், ஹோம் ரூல் கட்சி உள்ளிட்டோர் இங்கிலாந்து சென்று அந்தக் குழுவிடம் பேச்சுவார்த்தை நடத்தச் சென்றனர். ஏற்கெனவே திட்டமிட்டபடி தென்னிந்திய நலவுரிமைச் சங்கத்தின் சார்பாக டி.எம். நாயர் மீண்டும் லண்டன் புறப்பட்டார். அவருடன் கே.வி. ரெட்டி நாயுடு, கோக்கா அப்பாராவ் நாயுடு, கே. சுப்பாராவ், ராமராய நிங்கார், எல்.கே. துளசிராம், ஏ.பி. பாத்ரோ ஆகியோர் சென்றனர். சென்னை மாகாணச் சங்கத்தின் சார்பாக வி. சக்கரைச் செட்டியார், பி. செஞ்சயா ஆகியோரும் சென்னை திராவிடச் சங்கத்தின்

சார்பாக சர் ஏ. ராமசாமி முதலியாரும் காங்கிரஸ் சார்பாக சத்தியமூர்த்தி அய்யர், எஸ். சீனுவாச சாஸ்திரி, எம். ராமச்சந்திர ராவ், ஏ. ராமசாமி அய்யங்கார் ஆகியோரும், ஹோம் ரூல் சார்பாக டாக்டர் அன்னிபெசண்டும் லண்டன் வந்திருந்தனர்.

நாயரின் உடல்நிலை மோசமடைந்தது. கூட்டுப் பொறுக்குக் குழுவுக்கு முன்னால் நாயர் சாட்சியம் அளிக்கமுடியவில்லை. உடனே ஜூலை 18, 1919 அன்று கூட்டுப் பொறுக்குக் குழுவே (Joint Selection Committee) நாயர் தங்கியிருக்கும் மருத்துவ மனைக்கு வந்து அவருடைய சாட்சியத்தைப் பெற்றுக்கொள்வதாக அறிவித்தது. ஆனால் அதற்கு முந்தைய நாள் காலை ஐந்து மணிக்கு டாக்டர் நாயர் மரணம் அடைந்தார். லண்டனிலேயே அவருக்கு இறுதிக் காரியங்கள் நடத்தப்பட்டன. -தொடரும்...

மெஸ்டன் தீர்ப்பு

https://tamil.oneindia.com/books/literature/nhm-dravida-iyakka-varalaru/chapter-9.html

நாயரின் மறைவால் உறைந்து போயிருந்த நீதிக்கட்சித் தலைவர்கள் சுதாரித்து எழுவதற்குச் சிலகாலம் பிடித்தது. கூட்டுப் பொறுக்குக் குழுவிடம் நாயர் கொடுக்க வேண்டிய அறிக்கை அப்படியே இருந்தது. அதை நாயருக்குப் பதிலாக மற்ற பிரதிநிதிகள் கூட்டுப் பொறுக்குக் குழுவின் தலைவர் செல்போர்ன் பிரபுவிடம் கொடுத்தனர். அந்த அறிக்கையின் சாரம் இதுதான். பிராமணர்கள் தாங்கள் ஆரிய இனத்தை சேர்ந்தவர்கள் என்ற உணர்வைக் கொண்டிருப்பது போலவே பிராமணர் அல்லாத மக்கள் அனைவரும் தாங்கள் திராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள் என்ற பெருமித உணர்வோடு வாழ்ந்து வருகின்றனர். இரு இனத்தவர்களும் ஒரே விதமான இந்து சமய நெறிக் கோட்பாடுகளைப் பின்பற்றி வருகிறார்கள்

என்பதைத் தவிர, மற்றபடி எண்ணம், செயல், போக்கு, நடைமுறைப் பழக்க வழக்கம் ஆகியவற்றில் தனித்தனித்தன்மை உடையவர்களாகவே இருக்கிறார்கள்.

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ அடிப்படையில் சட்டமன்றப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பை, அரசியல் சீர்திருத்தம் மூலம் அளித்து, சமூகநீதி நிலவிட வழிவகுக்க வேண்டும் என்பதுதான் பிராமணர் அல்லாத மக்களின் கோரிக்கை. வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறைக்கு அரசியல் சீர்திருத்தத்தில் வழி செய்யாவிட்டால் தேர்தலில் எல்லாத் தொகுதிகளையும் ஆதிக்க அதிகாரம் கொண்ட பிராமணத் தலைவர்களே கைப்பற்றிக் கொள்வதற்கான நிலைமை ஏற்பட்டுவிடும். அரசுப் பதவிகள் அனைத்திலும் பிராமணர்களே முழு ஆதிக்கம் செலுத்தும் தன்மை உருவாகிவிடும். அதன் காரணமாக, அரசாட்சி ஆதிக்கம் முழுவதும் பிராமணர்களின் கைகளுக்குப் போய்விடும். பிராமண ஆதிக்கம் ஏற்பட்டுவிட்டது என்ற நிலைதான் இறுதியில் ஏற்படும்.

மாண்டேகு செம்ஸ்போர்டு அறிக்கையின்படியான அரசியல் சீர்திருத்தம் நடைமுறைப்படுத்தப்படுமேயானால் பிராமணர் அல்லாத மக்கள் ஆடுமாடுகளைப் போல் ஒரு எஜமானரிடம் இருந்து இன்னொரு எஜமானருக்கு விற்கப்படும் நிலைக்குத்தான் ஆளாகிவிடுவார்கள். இந்தியாவில், குறிப்பாகத் தென்னிந்தியாவில் சிறுபான்மைச் சமூகத்தினரான பிராமணர்கள் பெரும்பான்மைச் சமூகத்தினரான பிராமணர் அல்லாதார் மீது ஆதிக்கம் செலுத்தும் ஒரு நிலையை ஏற்படுத்தி விட்டால், எதிர்காலத்தில் எங்கு பார்த்தாலும் சட்டம் ஒழுங்கு கெட்டு, ரத்தக்களறிகள் ஏற்பட்டு விடும் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம். இந்திய மக்களிடையே அமைதி, மன நிறைவு, நீதி ஆகியவை ஏற்படத்தக்க வகையில் புதிய அரசியல் சீர்திருத்தம் உருவாக்கப்பட வேண்டும். இதுதான் அந்த அறிக்கையின் இறுதிப்பகுதி.

பிரிட்டிஷார் என்னதான் நல்லாட்சி நடத்தினாலும் அது எவ்வாறு இந்தியர்கள் தங்களைத் தாங்களே ஆண்டுகொள்ளும் சுயாட்சிக்குத் தகுந்த மாற்றாகாதோ அதைப்போலவே பிராமணர்கள் என்னதான் நல்லாட்சி கொடுத்தாலும் அது பிராமணர் அல்லாதாரின் சுயாட்சிக்குத் தகுந்த மாற்றாகாது என்பதுதான் கே.வி.ரெட்டி நாயுடு வலியுறுத்திச் சொன்ன கருத்து. சென்னை திராவிட சங்கத்தின் சார்பாக வந்திருந்த ஏ. ராமசாமி முதலியார், 'நாங்கள் கோரும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ உரிமை எப்போதுமே நீடித்து வரவேண்டி இருக்காது என்பது என்னுடைய சொந்தக் கருத்து. இடைப்பட்ட காலத்துக்குள் பிராமணர் அல்லாதார் தங்கள் வகுப்புநலனைப் பாதுகாத்துக் கொள்ளும் அளவுக்கு அரசியல் அறிவும் ஆற்றலும் பெற்று விடுவார்கள். பிராமணர் ஆதிக்கம் பற்றி இனியும் அச்சம் கொள்ளத் தேவையில்லை என்ற நம்பிக்கையையும் அவர்கள் அடைந்துவிடுவார்கள். ஆகவே, இந்தக் கூட்டுப் பொறுக்குக் குழுவினர் நாங்கள் இப்போது கோரிடும் வகுப்புரிமைக் கோரிக்கையில் உள்ள உண்மையையும் அவசியத்தையும் உணர்ந்து, அந்த உரிமையை அளிக்கத் தயங்கக்கூடாது.' என்றார்.

இவர்களுடைய சாட்சியங்களை முழுமையாகப் பெற்றுக்கொண்டாலும்கூட மேலும் சில பிராமணர் அல்லாத தலைவர்களின் சாட்சியங்களை நேரக்குறைவைக் காரணம் காட்டி பதிவு செய்ய மறுத்தது லேசான சலசலப்பை ஏற்படுத்தியது. நிலைமையை உணர்ந்துகொண்ட மாண்டேகு நீதிக்கட்சித் தலைவர்களை அழைத்துப் பேசினார். சமரசத் திட்டங்களைத் தயார் செய்து வைத்திருந்தார். பேச்சுவார்த்தையின் போக்கைப் பொறுத்து ஒவ்வொன்றாக எடுத்து வைக்கலாம் என்பது மாண்டேகுவின் திட்டம். சென்னை மாகாண சட்டசபையில் ஆறு சிறப்புத் தொகுதிகளை பிராமணர் அல்லாதாருக்கு ஒதுக்குகிறேன் என்றார் மாண்டேகு.

97 சதவீதம் உள்ள பிராமணர் அல்லாத மக்களுக்கு இந்த எண்ணிக்கை வெகு சொற்பம். உடனடியாக அந்த வாய்ப்பை

நிராகரித்தனர் நீதிக்கட்சித் தலைவர்கள். அடுத்து, இரட்டை உறுப்பினர் தொகுதிகளில் முப்பது தொகுதிகளைப் பிராமணர் அல்லாத மக்களுக்கு ஒதுக்கீடு செய்யத் தயாராக இருப்பதாகக் கூறினார் மாண்டேகு. ஆனால் அதிலும் நீதிக்கட்சியினர் சமாதானம் அடையவில்லை. மாண்டேகுவின் முகம் சுருங்கத் தொடங்கியது. பிராமணத் தலைவர்கள் பிராமணர் அல்லாத தலைவர்கள் அமர்ந்து பேசி முடிவுக்கு வாருங்கள். பிரச்னை சுமுகமாகத் தீர்க்கப்பட வேண்டும். எனக்கு வேண்டியது அதுதான். புறப்பட்டு விட்டார் மாண்டேகு. பேச்சுவார்த்தைகள் தொடங்கின.

வாதத்திறமையில் யார் வல்லவர்கள் என்பதற்கான போட்டி போல இருந்தது பேச்சுவார்த்தை. முடிவு எதுவும் எடுக்கப்படாமலேயே பேச்சுவார்த்தை முடிந்துபோனது. தலைவர்களின் சாட்சியங்களைப் பதிவுசெய்யும் பணிகள் முடிந்ததும் 17 நவம்பர் 1919 அன்று கூட்டுப் பொறுக்குக்குழு தன்னுடைய இறுதி அறிக்கையை வெளியிட்டது. 'சென்னை மாகாணத்துப் பிராமணர் அல்லாதாருக்குச் சில இடங்களை ஒதுக்கீடு செய்வதன் மூலம் தனிப் பிரதிநிதித்துவம் தரவேண்டும். பிராமணரும் பிராமணர் அல்லாதாரும் இதுகுறித்துப் பேச்சுவார்த்தை நடத்தி உடன்பாடு காண அழைக்கப்பட வேண்டும். இந்த விதத்தில் அவர்களிடையே ஒருமித்த கருத்து உருவாகாவிட்டால் இந்திய அரசு ஒரு நடுவரை (ஆர்பிட்ரேட்டர்) நியமித்துத் தீர்ப்பு பெறவேண்டும்' கூட்டுப் பொறுக்குக் குழுவின் இறுதி அறிக்கையை நீதிக்கட்சி கடுமையாக எதிர்த்தது. ஆனாலும் பிராமணர் அல்லாதார்க்கு சட்டமன்றத்தில் தனிப்பிரதிநிதித்துவம் என்பதைக் கொள்கை அளவில் சாதித்த மகிழ்ச்சி மட்டுமே மிச்சமிருந்தது. பிரச்னை தீர்ந்தபாடில்லை. பஞ்சாயத்து முடிந்தபாடில்லை.

இன்னொரு முயற்சி செய்து பார்க்கலாம் என்று நினைத்தார் சென்னை ஆளுநர் வெல்லிங்டன் பிரபு. 13 ஜனவரி 1920.

சென்னை மாகாணத்தைச் சேர்ந்த பிராமணர் மற்றும் பிராமணர் அல்லாத தலைவர்களின் கூட்டம் ஒன்றுக்கு அழைப்பு விடுத்தார். கூட்டுப்பொறுக்குக்குழுவின் அறிக்கையை பிராமணர் அல்லாதவர்கள் ஏற்கவேண்டும் என்பதுதான் அவருடைய விருப்பம். இப்படிச் சொன்னதற்குப் பின்னணியில் இருந்தது சமீபத்தில் நடந்துமுடிந்த சென்னை மாநகராட்சித் தேர்தலில் வந்திருந்த முடிவுகளும் அதில் பிராமணர் அல்லாத உறுப்பினர்களுக்குக் கிடைத்த வெற்றிகளும்தான். அப்படி என்ன பெரிதாக வெற்றிபெற்றுவிட்டார்கள் பிராமணர் அல்லாதவர்கள்?

மொத்தம் முப்பது இடங்களுக்கு நடைபெற்ற தேர்தல் அது. வெற்றிபெற்றவர்களில் பத்தொன்பது பேர் பிராமணர் அல்லாத இந்துக்கள். ஏழு பேர் பிராமணர்கள். கிறித்தவர்கள், முஸ்லிம்கள் தலா இரண்டு பேர். பிராமணர் அல்லாத மக்கள் இத்தனை பெரிய வெற்றியைப் பெற்றிருக்கும்போது எதற்காக அவர்கள் தனித்தொகுதி கோரவேண்டும், எதற்காகக் கொடுக்கவேண்டும் என்பதுதான் வெல்லிங்டன் எழுப்பிய கேள்விகள். ஆனால் நீதிக்கட்சித் தலைவர்கள் வெலிங்டனின் கோரிக்கையை நிராகரித்து விட்டனர். கூட்டம் தோல்வியில் முடிந்தது. பிறகு ஜனவரி மாத இறுதியில் மீண்டும் ஒருமுறை இருதரப்புத் தலைவர்களையும் அழைத்துப் பேசினார்.

பிராமணர்களின் பிரதிநிதியாக சி.பி. ராமசாமி அய்யர் மற்றும் ராமச்சந்திர ராவ் இருவரும் கலந்துகொண்டனர். பிராமணர் அல்லாதார் சார்பில் பிட்டி. தியாகராயரும், கே.வி. ரெட்டி நாயுடுவும் கலந்துகொண்டனர். மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கையில் பிராமணர் அல்லாதார் எந்த அளவு இருக்கிறார்களோ அந்த விகிதாச்சாரத்துக்கு ஏற்ற வகையில் அவர்களுக்கென்று தனித்தொகுதிகள் ஒதுக்கப்பட வேண்டும் என்பது நீதிக்கட்சித் தலைவர் பிட்டி. தியாகராயரின் வாதம். எட்டு பேருக்கு ஒருவராக இருக்கும் பிராமணர்களுக்கு மொத்தமுள்ள 63 சட்டமன்றத் தொகுதிகளில் ஏழு இடங்கள் மட்டுமே பிராமணர்களுக்கு மிஞ்சும். சி.பி. ராமசாமி

அய்யருக்கு இந்தமாதிரியான கணக்குகள் எதுவும் பிடிக்கவில்லை. வாக்காளர் எண்ணிக்கை, மக்கள்தொகை எண்ணிக்கை எல்லாம் ஒத்துவராது, வேண்டுமானால் ஒரு குறைந்தபட்ச அளவு இடங்களை மட்டும் பிராமணர் அல்லாத மக்களுக்கு ஒதுக்கலாம் என்றார்.

வெலிங்டன் பிரபு மொத்தமுள்ள 63 இடங்களில் 31 இடங்களை பிராமணர் அல்லாத மக்களுக்கு ஒதுக்க முன்வந்தார். பிட்டி. தியாகராய செட்டியாரோ எழுபத்தைந்து சதவீதத்தில் உறுதியாக இருந்தார். அதற்கு வெலிங்டன் பிரபு சம்மதிக்கவில்லை. பேச்சுவார்த்தை மீண்டும் தோல்வியில் முடிந்தது. இனியும் தன்னால் பஞ்சாயத்து பேசிக்கொண்டிருக்க முடியாது. உடனடியாக நடுவர் ஒருவரைக் கொண்டு ஏதேனும் ஒரு முடிவுக்கு வருவதுதான் சரியாக இருக்கும் என்று மத்திய அரசுக்குக் கடிதம் எழுதிவிட்டார் வெலிங்டன் பிரபு. லார்டு மெஸ்டன். புதிய பஞ்சாயத்து தலைவர். அதாவது, ஆர்பிட்ரேட்டர். இனி இவர்தான் பிரச்னையை விசாரித்துத் தீர்க்கப் போகிறார் என்று அறிவித்தது பிரிட்டிஷ் அரசு.

1 மார்ச் 1920 அன்று மெஸ்டன் குழுவினரின் முன்னால் இருதரப்புப் பிரதிநிதிகளும் ஆஜராகினர். பிராமணர் அல்லாத மக்களின் பிரதிநிதிகளாக பிட்டி. தியாகராயர், ஏ. ராமசாமி முதலியார், எல்.கே. துளசிராம் ஆகியோர் வந்திருந்தனர். பி.கேசவப் பிள்ளை, சக்கரைச் செட்டியார், லாட் கோவிந்த தாஸ் ஆகியோர் சென்னை மாகாணச் சங்கத்தின் சார்பில் வந்திருந்தனர். பிராமணர்கள் சார்பாக சி.பி. ராமசாமி அய்யர், டி.பி. ராமச்சந்திர அய்யர், பி.வி. நரசிம்ம அய்யர், கே. ராம அய்யங்கார், பி. நாராயண மூர்த்தி, ராமச்சந்திர ராவ் ஆகியோர் கலந்துகொண்டனர். இருதரப்பைச் சேர்ந்தவர்களிடமும் தனித்தனியாகக் கருத்துகளைக் கேட்டார் லார்ட் மெஸ்டன். மொத்தமுள்ள 66 தொகுதிகளில் 42 தொகுதிகளை பிராமணர்

அல்லாத மக்களுக்கு ஒதுக்க வேண்டும் என்பது நீதிக்கட்சி முன்வைத்த கோரிக்கை. அதையே சென்னை மாகாணச் சங்கமும் வலியுறுத்தியது. திடீரென நீதிக்கட்சியும் சென்னை மாகாணச் சங்கமும் ஓரணியில் திரண்டது மற்ற பிராமணத் தலைவர்களை ஆச்சரியப்படுத்தியது. நாங்களே சிறுபான்மையினர். எங்களுக்குத்தான் தனித்தொகுதி என்ற பாதுகாப்பு ஏற்பாடுகள் தேவை. 65 தொகுதிகள் ஒதுக்கப்பட்டால் அவற்றில் 25 தொகுதிகள் மட்டுமே பிராமணர் அல்லாத மக்களுக்கு ஒதுக்கவேண்டும் என்பது பிராமணத் தலைவர்களின் வாதம்.

அதேசமயம் பிராமணர் அல்லாத மக்களுக்கு தனித் தொகுதிகள் ஒதுக்கப்படுவதையும் கடுமையாக எதிர்த்தனர். எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டார் லார்ட் மெஸ்டன். பிறகு 18 மார்ச் 1920 அன்று தீர்ப்பை எழுதினார். 'மொத்தமுள்ள 65 பொதுத் தொகுதிகளில் 28 தொகுதிகள் பிராமணர் அல்லாத மக்களுக்கு ஒதுக்கப்படும்.' பிராமணர்கள், பிராமணர் அல்லாதவர்கள் என்ற இருதரப்பு வாதங்களையும் பெயரளவில் மட்டுமே கேட்டு, பிராமணர்களின் கோரிக்கைக்கு மட்டுமே ஏற்றுக்கொண்டிருக்கிறார் மெஸ்டன் என்பது அவரது தீர்ப்பில் இருந்தும் அதற்காக அவர் அளித்த விளக்கங்களில் இருந்தும் தெள்ளத் தெளிவாகப் புரிந்தது. அந்த விளக்கம் இதுதான்: தேர்தலில் பிராமணர் அல்லாதார் தங்களுக்குப் பாதுகாப்பு கேட்பதன் காரணம் சிறுபான்மை இனத்தவரான பிராமணர்களுக்கு சமூகத்தில் இருக்கும் ஆதிக்கத்தாலும் தேர்தல் தந்திர உத்திகளாலும் தேர்தலில் மைனாரிட்டி ஆகிவிடுவோம் என்று அச்சப்படுவதுதான்.

ஆனால் வாக்காளர் எண்ணிக்கையைக் கணக்கிட்டுப் பார்த்தால் பிராமணர், பிராமணர் அல்லாதார் சதவீதம் 1: 8 என்ற விகிதத்தில் இருக்கிறது. இத்தனை பெரிய வித்தியாசம் இருப்பதால் பிராமணர் அல்லாத மக்களுக்கு சட்டமன்றத்தில் நிரந்தரமாகத் தனிப் பெரும்பான்மை கிடைக்க வழிசெய்யும் வகையில் தனித்தொகுதி ஒதுக்கத் தேவையில்லை.

தனிப்பெரும்பான்மை கிடைப்பதற்குத் தேவையான அளவைவிடக் குறைந்த அளவு இடங்களை ஒதுக்கினால் மட்டுமே தேர்தலில் வெற்றிபெறவேண்டும் என்ற எண்ணம் பிராமணர் அல்லாத மக்களுக்கு ஏற்படும். இதுதான் மெஸ்டன் கொடுத்த விளக்கம். கனவு கலைந்தது போல இருந்தது நீதிக்கட்சியினருக்கு. உண்மையிலேயே மிகப்பெரிய ஏமாற்றத்தைச் சந்தித்தனர் பிராமணர் அல்லாத தலைவர்கள்.

மெஸ்டனின் தீர்ப்பு பிராமணர்களுக்கு சாமரம் வீசும் தீர்ப்பு என்று விமரிசனம் செய்யப்பட்டது. மெஸ்டன் தீர்ப்புக்குப் பிறகு சென்னை மாகாண சட்டசபைக்குத் தேர்தல் நடத்துவதற்கான வேலைகள் தொடங்கின. தேர்தல் வேலைகளைச் செய்துமுடிக்கும் பொறுப்பு ஏ.ஆர். நாப் (A.R. Knapp) என்ற தலைமைச் செயலக உறுப்பினர் வசம் தரப்பட்டது. மாகாண சட்டசபையின் ஆயுள்காலம் மூன்று ஆண்டுகள். கவர்னர் விரும்பினால் ஆயுள்காலத்தை மேலும் இரண்டு ஆண்டுகள் நீட்டிப்பு செய்யலாம். அதேசமயம் மூன்று ஆண்டுகளுக்குள் சட்டசபையைக் கலைக்கும் உரிமையும் கவர்னருக்கு உண்டு. முதல்கட்டமாக சட்டமன்றத்துக்கான உறுப்பினர் எண்ணிக்கை எத்தனை இருக்கவேண்டும் என்பது குறித்து விவாதிக்கப்பட்டது. பொதுத்தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் 65 தொகுதிகளுக்கும் முகமதியர் அல்லாத தொகுதிகள் என்று புதிய பெயர் வைக்கப்பட்டது.

முதலில் பிராமணர் அல்லாதாருக்கான தனித்தொகுதிகள் என்றுதான் பெயர் இருந்தது. ஆனால் அதை சிலருடைய தலையீட்டின்கீழ் முகமதியர் அல்லாத தொகுதிகள் என்று மாற்றிவிட்டதாக ஒரு செய்தி இருக்கிறது. இவைதவிர, முஸ்லிம்களுக்கு 13, இந்திய கிறித்தவர்களுக்கு 5, ஐரோப்பியர்களுக்கு 1, ஆங்கிலோ இந்தியர்களுக்கு 1, ஜமீன்தார்களுக்கு 6, ஐரோப்பிய வர்த்தகக் கழகத்துக்கு 4, இந்திய வர்த்தகக் கழகத்துக்கு 2, பல்கலைக் கழகத்துக்கு 1

என்ற அளவில் தனித்தொகுதிகள் ஒதுக்கப்பட்டன. மேலே இருக்கும் 33 இடங்களும் தேர்தல் மூலமே நிரப்பப்படும். இவைதவிர, அதிகாரிகள் 7, தாழ்த்தப்பட்டோர் 10, விடுபட்ட பிரிவினர் 12 ஆகியோர் நியமனம் செய்யப்படுவார்கள். ஆக, சென்னை மாகாண சட்டமன்றத்தின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 127. தொகுதிகள் தயார். நல்லது.

வாக்காளர்கள்? சொத்து இருப்பவர்கள், வரி செலுத்துபவர்கள், எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் ஆகியோர் மட்டுமே தேர்தலில் வாக்களிக்கத் தகுதியுடையவர்கள். பத்து ரூபாயை நிலவரியாகக் கட்டுபவர்களுக்கு கிராமப் புறங்களில் வாக்களிக்கும் உரிமை உண்டு. நகராட்சிக்கு மூன்று ரூபாயை வரியாகச் செலுத்துபவர்கள் நகர்ப்புறங்களில் வாக்களிக்க முடியும். ஆக, மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை பன்னிரண்டரை லட்சம். பெண்களுக்கு வாக்களிக்கத் தகுதியில்லை என்பது அதிர்ச்சி தரும் அறிவிப்பு. வேண்டுமானால் தேர்தலுக்குப் பிறகு அமையும் புதிய சட்டமன்றம் பெண்களுக்கான வாக்குரிமை குறித்து முடிவெடுத்துக் கொள்ளலாம் என்று தீர்மானிக்கப்பட்டது. பெண்கள் தவிர, பிரிட்டிஷ் குடியுரிமை பெறாதவர்கள், 21 வயதுக்குக் கீழே இருப்பவர்கள், மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் ஆகியோரும் தேர்தலில் வாக்களிக்க முடியாது.

1920 செப்டெம்பர் மாதத்தில் தேர்தல் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதில் கலந்துகொள்ள நீதிக்கட்சி தயாராகிவிட்டது. அந்தச் சமயத்தில் இந்தியாவின் மிகப்பெரிய தேசிய இயக்கமான இந்திய தேசிய காங்கிரஸ் என்ன செய்துகொண்டிருந்தது? -தொடரும்...

நீதிக்கட்சி ஆட்சியைப் பிடித்தது

https://tamil.oneindia.com/books/literature/nhm-dravida-iyakka-varalaru/chapter-10.html

சீராரு நமிந்திய சக்ரவர்த்தினியம்மை ஜெயம் தின மோங்குகவே!
பாரார்கதி ரோனொளி மாழ்கலிலாப் பரிபாலன ராச்சிய மோங்குகவே!

கொஞ்சம் புரியும்படி சொல்லலாமா? 'மகாராணியின் அனுகூலமான என்றும் மறப்பரிய கீர்த்திமிக்க ஆட்சியின் ஐம்பது வருஷம் முடிவுபெற்றதைக் குறித்தும் சக்ரவர்த்தியிடம் முறைப்படி உண்மையான மகிழ்ச்சி தெரிவிப்பதுடன் பாரத தேசத்தின் எல்லாப் பகுதிகளினின்றும் பிரதிநிதிகள் வந்துகூடிய இந்த ஜனசபை, பிரிட்டிஷ் ராஜ்ஜியத்தின்மீது அம்மகாராணி இன்னும் பல வருஷம் ஆளவேண்டுமென்று வாழ்த்துகிறது.'

பிரிட்டிஷாரிடம் இருந்து இந்தியாவை மீட்கப் புறப்பட்ட இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் ஆண்டு மாநாடுகளில் பாடப்படும் வாழ்த்துப்பாடலும் வாழ்த்தும் தீர்மானமுமே மேலே இருப்பவை. இந்திய தேசிய காங்கிரஸின் உருவாக்கமே சுவையானது. சிப்பாய் புரட்சி அடங்கிய பிறகும்கூட பிரிட்டிஷாருக்குக் கொஞ்சம் சந்தேகம் இருந்தது. எப்போது வேண்டுமானாலும் புரட்சி வெடிக்கக்கூடும் என்ற பயம் அவர்களை வாட்டியது. மீண்டும் ஒரு புரட்சியில் இருந்தும் ஆபத்தில் இருந்தும் பிரிட்டிஷ் அரசு காப்பாற்றப்பட வேண்டும் என்றால் அதற்கு ஒரு சேஃப்டி வால்வு அவசியம் என்ற கருத்து எழுந்தது. எழுப்பியவர் ஆலன் ஆக்டேவியன் ஹ்யூம். ஓய்வுபெற்ற பிரிட்டிஷ் அதிகாரி. பிரிட்டிஷ் இந்தியாவில் ஏற்கெனவே இந்தியன் அசோஷியேஷன் ஆஃப் கல்கத்தா. பிரசிடென்சி

அசோஷியேஷன் ஆஃப் பாம்பே, சென்னை மகாஜன சபா என்று ஏராளமான சங்கங்களும் சபாக்களும் இருக்கின்றன. பம்பாயில் பேசுகிறார்கள். கல்கத்தாவில் பேசுகிறார்கள். சென்னையில் பேசுகிறார்கள். இன்னும் பல இடங்களில் பேசுகிறார்கள்.

அந்த அமைப்புகளில் இருப்பவர்கள் எல்லாம் படித்தவர்கள். பணக்காரர்கள். அவர்களைப் பின்பற்றுபவர்கள்தான் இந்தியாவில் நிரம்பியிருக்கிறார்கள். தனித்தனித் தீவுகளாக இருக்கும் சங்கங்களையும் சபாக்களையும் ஒரே குடையின்கீழ் திரட்டிவிட்டால் அற்புதமான சேஃப்டி வால்வு தயார். அதன் பெயர் இந்திய தேசிய காங்கிரஸ். வைஸ்ராய் டஃப்ரின் பிரபுவின் ஆசியுடன் இந்திய தேசிய காங்கிரஸ் உருவானது. 28 டிசம்பர் 1885 அன்று பம்பாயில் இருக்கும் கோகுல்தாஸ் தேஜ்பல் சமஸ்க்ருதக் கல்லூரி அரங்கில் இந்திய தேசிய காங்கிரஸின் முதல் கூட்டம் கூடியது. உமேஷ் சந்திர பானர்ஜி முதல் தலைவர். பொதுச்செயலாளராக ஆலன் ஆக்டேவியன் ஹ்யூம். ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் மாதத்தில் காங்கிரஸ் கட்சியின் மாநாடு கூடும் என்று அறிவிக்கப்பட்டது.

ஒவ்வொரு ஆண்டும் புதிய தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டபோதும் பொதுச்செயலாளர் பதவியில் ஹ்யூமே 1885 முதல் 1906 வரை தொடர்ந்து நீடித்தார். இங்கிலீஷ் ராஜ்ஜியத்தினிடம் நாம் பூர்ணமாக அன்பும் ஆதரவும் கொண்டிருக்கிறோம். அவர்கள் நமக்குச் செய்த நன்றிகளையெல்லாம் மறக்கமாட்டோம். அவர்கள் நமக்குக் கொடுத்த கல்வியினால் புதியதோர் ஒளி பெற்றோம். ஜனங்களுடைய நன்மைக்காக ராஜாவேயொழிய, ராஜாவுக்காக ஜனங்களில்லை என்று பாடம் அவர்கள் நமக்குக் கற்றுக்கொடுத்தார்கள். ஆசியாவின் கொடுங்கோன்மையாகிய இருளுக்கிடையே ஆங்கிலேய நாகரிகத்தின் ஒளி நமக்குக்

கிடைத்தது என்று 1914ல் கல்கத்தாவில் நடந்த காங்கிரஸ் மாநாட்டில் பேசினார் தாதாபாய் நௌரோஜி.

பிரிட்டிஷாருக்கு நெருக்கமாகவும் மகாராணிக்கு வாழ்த்துப்பா பாடிக்கொண்டும் இருந்த இந்திய தேசிய காங்கிரஸ் ரௌலட் சட்டம், ஜாலியன் வாலாபாக் படுகொலை, கிலாபத் அநீதி ஆகியவற்றின் காரணமாக பிரிட்டிஷ் அரசுக்கு எதிராக ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடங்கியிருந்தது. ஒத்துழையாமை என்றால் தேர்தலிலும் ஒத்துழையாமைதான். மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தத்தின்படி நடக்கும் மத்திய மற்றும் மாகாண சட்டசபைத் தேர்தல்களில் இந்திய தேசிய காங்கிரஸ் போட்டியிடாது என்று அறிவித்திருந்தார் காந்தி. தேர்தல் புறக்கணிப்பு என்பது சென்னை மாகாணக் காங்கிரஸ் தலைவர்களுக்கு அதிருப்தியாக இருந்தது. வேண்டாம் இந்த விபரீத விளையாட்டு. கொஞ்சம் அசந்தாலும் ஆட்சியைக் கைப்பற்றிவிடக் காத்திருக்கிறது நீதிக்கட்சி. கொஞ்சம் கருணை காட்டுங்கள் என்றனர் இங்குள்ள காங்கிரஸ் தலைவர்கள்.

அதாவது, காங்கிரஸில் இருக்கும் முக்கியப் பிராமணத் தலைவர்கள். ஒருபக்கம் காந்திக்கு விண்ணப்பம் அனுப்பிக் கொண்டே இன்னொரு பக்கம் தேர்தல் பிரசாரத்திலும் மறைமுகமாக ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். முக்கியமாக, ‘இந்து’ கஸ்தூரி ரங்க அய்யங்கார் மற்றும் சத்தியமூர்த்தி அய்யர் இருவரும் நீதிக்கட்சியை எதிர்த்துக் காங்கிரஸைக் களமிறக்கியே தீருவது என்ற முடிவில் உறுதியாக இருந்தனர். தேர்தல் புறக்கணிப்பில் எவ்வித மாற்றமும் இல்லை என்று திட்டவட்டமாகச் சொல்லிவிட்டார் காந்தி. தேர்தலும் வேண்டும். காந்தியும் வேண்டும். மதில் மேல் பூனையாக நின்றுகொண்டிருந்தனர் சென்னை மாகாண காங்கிரஸ் தலைவர்கள். பல கேள்விகளுக்குப் பதில் கொடுக்கும் வகையில் காங்கிரஸ் சிறப்பு மாநாடு செப்டெம்பர் 4,6,8 1920 ஆகிய தேதிகளில் கல்கத்தாவில் கூடியது.

ஒத்துழையாமை இயக்கம் குறித்த இறுதி முடிவை எடுக்கவேண்டும் என்பதுதான் மாநாடு கூட்டப்பட்டதன் நோக்கம். அதில் பல திகைப்பூட்டும் முடிவுகள் எடுக்கப்பட்டன.

பிரிட்டிஷ் அரசிடம் இருந்து பெற்றுள்ள பட்டங்களைத் துறத்தல், அரசாங்க கௌரவப் பதவிகளில் இருந்து விலகுதல், அரசு விழாக்களில் கலந்துகொள்ளாமல் புறக்கணித்தல், பிரிட்டிஷாரின் நீதிமன்றங்களை இந்திய வழக்கறிஞர்கள் புறக்கணித்தல் போன்ற பல முடிவுகள் எடுக்கப்பட்டன. எல்லாவற்றைக் காட்டிலும் முக்கியமானது, மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தத்தின் விளைவாக நடத்தப்பட இருக்கும் தேர்தலைப் புறக்கணிப்பது என்று இந்திய தேசிய காங்கிரஸ் முடிவு செய்தது. தவித்துப் போனார்கள் சென்னை மாகாண காங்கிரஸ் தலைவர்கள். காங்கிரஸ் கட்சியின் தீர்மானம் நாட்டு மக்களைக் குழப்பும் முயற்சி என்று விமரிசனம் செய்த நீதிக்கட்சி, சென்னை மாகாணத்தில் தேர்தலைச் சந்திக்கத் தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டது. தேர்தலில் போட்டியிடவில்லை என்று காங்கிரஸ் தலைமை அறிவித்தபிறகு அந்தக் கட்சியின் மறைமுக ஆதரவுடன் பல வேட்பாளர்கள் நீதிக்கட்சி வேட்பாளர்களை எதிர்த்து சுயேட்சையாக நின்றனர். ஹோம் ரூல் இயக்கமும் தனது வேட்பாளர்களை நிறுத்தியிருந்தது. அந்தத் தேர்தலில் சென்னைக்கு நான்கு இடங்கள் தரப்பட்டு, அனைத்தும் ஒரே தொகுதியாகக் கொள்ளப்பட்டது.

ஆக, வேட்பாளர்கள் அனைவரும் சென்னை என்ற ஒற்றைத் தொகுதிக்கே போட்டியிடுவார்கள். அந்த நான்கில் இரண்டு இடங்கள் பிராமணர் அல்லாதவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்தன. அதன்படி வாக்காளர்கள் அனைவரும் இந்த நால்வரில் தங்களுக்குப் பிடித்தவர்களுக்கு வாக்களிக்கவேண்டும். அதிக வாக்குகளைப் பெற்ற முதல் இரண்டு பிராமணர் அல்லாத வேட்பாளர்கள் பிராமணர் அல்லாத இரண்டு இடங்களின் உறுப்பினர்களாகத் தேர்வு

செய்யப்பட்டதாக அறிவிக்கப்படுவர். இந்த இரண்டு பேரையும் தவிர்த்த மற்ற வேட்பாளர்களில் அதிக எண்ணிக்கை பெற்ற இரண்டு வேட்பாளர்கள் மற்ற இரண்டு இடங்களுக்குத் தேர்வு செய்யப்பட்டதாக அறிவிக்கப்படுவர்.

பிராமணக் கொடுங்கோன்மையில் இருந்து மீளவும், மீண்டும் சுதந்தரப் பிரஜைகளாக நாம் வாழவும் இந்தத் தேர்தல் ஒரு அரிய சந்தர்ப்பம். இந்தத் தேர்தல் முடிவைப் பொறுத்தே நமது கட்சியின் எதிர்காலமும் பிராமணர் அல்லாதார் சமுதாயத்தின் எதிர்காலமும் அமையப் போகிறது. பிராமணர்கள் ஆட்சிக்கு வந்துவிட்டால் அவர்கள் தங்கள் நிலையைக் கெட்டியாக்கிக் கொள்வார்கள். அது நமக்கு என்றும் நீங்காத பாதகமாகிவிடும். இப்போது இல்லை என்றால் இனி எப்போதுமே நமக்கு இந்த வாய்ப்பு கிடைக்காது; கிடைக்கவே கிடைக்காது. நாம் அதிக அளவு சட்டசபைக்கு அனுப்பிவைக்கப்படவில்லை என்றால் நாம் இந்த அரிய வாய்ப்பை இழந்தவர்களாக ஆகிவிடுவோம். நமது முன்னேற்றக் கடிகாரத்தின் முள் இருபது ஆண்டுகள் பின்னுக்குத் தள்ளி வைக்கப்படும். கடந்த மூன்று ஆண்டுகாலப் பணி வீணாகிவிடும்.

எனவே நண்பர்களே, கிராமங்களுக்குப் போய் நமது வாக்கின் அருமையை எடுத்துச் சொல்லுங்கள். பிராமணர் அல்லாதோர்தான் பெரும்பான்மையாக இருக்கிறோம். பிராமண அதிகாரி, புரோகிதன், வக்கீல் ஆகியோரின் தீங்கு பயக்கும் பின்விளைவுகளில் இருந்து ரகசிய ஓட்டுமுறை அவர்களைக் காப்பாற்றும் என்பதை எடுத்துச் சொல்லுங்கள் என்று பிரசாரம் செய்தார் கே.வி. ரெட்டி நாயுடு. தேர்தலின்போது நீதிக்கட்சி கொடுத்த வாக்குறுதிகள் முக்கியமானவை. அரசுப் பணிகள் அனைத்திலும் பிராமணர் அல்லாதார்க்கு உரிய முக்கியத்துவம் கொடுக்க சட்டமும் விதிகளும் இயற்றப்படும். கோயில் சொத்துகளைத் தனியார் கொள்ளையிடுவதில் இருந்து காப்பாற்ற சட்டம் கொண்டு வரப்படும். அனைத்து உள்ளாட்சித் துறைகளுக்கும் அதிக அதிகாரங்கள் வழங்கப்படும். விவசாய வளர்ச்சிக்கும்

விவசாயிகளின் நலன்களுக்கும் உடனடித் திட்டங்கள் நிறைவேற்றப்படும். முதல் வெற்றி 30 நவம்பர் 1920 அன்று தேர்தல் நடைபெற்றது. வன்முறைச் சம்பவங்கள், கலகங்கள், தகராறுகள் ஆங்காங்கே நடந்துகொண்டிருந்தன. இறுதியில் முடிவுகள் அறிவிக்கப்பட்டபோது பிராமணர் அல்லாத வேட்பாளர் பெருவாரியான இடங்களைக் கைப்பற்றியிருந்தனர்.

ஆம். தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட 98 இடங்களில் நீதிக்கட்சிக்கு 63 இடங்கள் கிடைத்திருந்தன. சென்னை தொகுதியில் நீதிக்கட்சி சார்பில் பிட்டி. தியாகராய செட்டியார், டாக்டர். சி. நடேச முதலியார், ஓ. தணிகாசலம் செட்டியார், வி. திருமலைப் பிள்ளை ஆகிய நால்வர் போட்டியிட்டனர். அவர்களை எதிர்த்து ஹோம் ரூல் சார்பில் சி.பி. ராமசாமி அய்யர், டாக்டர் யூ. ராமாராவ், சல்லா குருசாமி செட்டியார், எம். விஜயராகவலு ஆகியோர் நிறுத்தப்பட்டனர். கே. வியாசராவ் என்ற சுயேட்சை வேட்பாளரும் களத்தில் இருந்தார். வாக்கு எண்ணிக்கை விவரம்: 1. பிட்டி. தியாகராய செட்டியார் 4996 2. சி.பி. ராமசாமி அய்யர் 4933 3. டாக்டர் யூ. ராமாராவ் 4408 4. ஓ. தணிகாசலம் செட்டியார் 4127 5. டாக்டர் சி. நடேச முதலியார் 3311 6. வி. திருமலைப் பிள்ளை 3236 7. சல்லா குருசாமி செட்டியார் 2982 8. எம். விஜயராகவலு 1135 9. கே. வியாசராவ் 581 ஆக, அதிக வாக்குகள் பெற்ற பிராமணர் அல்லாத வேட்பாளர்களான பிட்டி. தியாகராய செட்டியாரும் ஓ. தணிகாசலம் செட்டியாரும் முதல் இரண்டு தனி இடங்களுக்குத் தேர்வு செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டனர்.

இவர்களைத் தவிர்த்த மற்ற வேட்பாளர்களின் அதிக இடங்களைப் பெற்ற சி.பி. ராமசாமி அய்யரும் டாக்டர் யூ. ராமாராவும் அடுத்த இரண்டு பொது இடங்களுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். நீதிக்கட்சியின் நிறுவனர்களுள்

ஒருவரான டாக்டர் சி. நடேச முதலியார் சட்டமன்றத்துக்குத் தேர்வு செய்யப்படாதது சோகம் என்றால் நீதிக்கட்சித் தலைவர்களுக்கு இடையே நிலவிய பிணக்குகள்தான் தோல்விக்குக் காரணம் என்பது மிகப்பெரிய சோகம்.

மதுரையில் இருந்து பி.டி. ராசன், சி. பொன்னுசாமி நாயுடு, கே.பி. கோபால மேனன் ஆகிய மூவரும் வெற்றி பெற்றனர். தென்னார்க்காடு மாவட்டத்தில் இருந்து ஏ. சுப்பராயலு ரெட்டியார் வெற்றி பெற்றிருந்தார். இந்திய தேசிய காங்கிரஸ் பெயரளவில் புறக்கணித்த தேர்தல் இது. ஆனால் ஹோம் ரூல் இயக்கத்தினராலும் சுயேட்சைகளாலும் அனைத்து தொகுதிகளிலும் கடுமையான போட்டியை எதிர்கொண்டது நீதிக்கட்சி. இறுதி வெற்றி நீதிக்கட்சிக்குத்தான்! 4 டிசம்பர் 1920 அன்று சென்னை மாகாண அரசை நீதிக்கட்சி கைப்பற்றியது.

பிராமணர் அல்லாதார் உரிமைக்குரல் மட்டுமே தேர்தல் பிரச்னையாகப் பார்க்கப்பட்ட இந்தத் தேர்தலில் பிராமணர் அல்லாத மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக இருந்த நீதிக்கட்சி வெற்றி பெற்றது. சென்னை மாகாண கவர்னராக இருந்த வெல்லிங்டன் பிரபு நீதிக்கட்சியின் தலைவரான பிட்டி. தியாகராய செட்டியாரை ஆட்சி அமைக்க அழைப்பு விடுத்தார். (நீதிக்கட்சிக்கு நியமன உறுப்பினர்கள் 18 பேரின் ஆதரவும் இருந்தது) கவர்னரின் அழைப்பை ஏற்றுக்கொள்ள மறுத்த தியாகராயர், தனக்குப் பதிலாகக் கடலூரரைச் சேர்ந்த வழக்கறிஞர் ஏ. சுப்பராயலு ரெட்டியார் முதல் அமைச்சராகப் பதவியேற்றுக் கொள்வார் என்று அறிவித்தார்.

அதைக் கடிதம் மூலமாக வெலிங்டன் பிரபுவுக்கும் தெரிவித்தார். ஏ. சுப்பராயலு ரெட்டியார் முதல் அமைச்சராக நியமிக்கப்பட்டார். ராமராய நிங்கார் இரண்டாவது அமைச்சராகவும் கே. வேங்கட்ட ரெட்டி நாயுடு (கே.வி. ரெட்டி நாயுடு) மூன்றாவது அமைச்சராகவும்

நியமிக்கப்பட்டனர். ராமராய நிங்காருக்குத் தொழில்துறையும் கே.வி. ரெட்டி நாயுடுவுக்குக் கல்வித்துறையும் தரப்பட்டன. முதல் அமைச்சர் வசம் கல்வி, பொதுப்பணி, ஆயத்தீர்வை, பதிவு ஆகிய துறைகள் இருந்தன.

மாகாண சட்டசபையை நடத்துவதற்காக பி. ராஜகோபாலாச்சாரியை நியமித்தார் வெலிங்டன் பிரபு. அவர்தான் சட்டமன்றத்தின் தலைவர். சர். சி.பி. ராமசாமி அய்யர் அட்வகேட் ஜெனரலாக நியமிக்கப்பட்டார். சட்டமன்றத் துணைத் தலைவர் பொறுப்பு கூட்டி கேசவப் பிள்ளை வசம் வந்தது. ஆர்.கே. சண்முகம் செட்டியார், ஏ. ராமசாமி முதலியார், பாரிஸ்டர் தங்கவேலு ஆகிய மூவரும் அமைச்சரவைக் குழுவின் செயலாளர்களாக நியமிக்கப்பட்டனர். ஆக, 17 டிசம்பர் 1920 அன்று சென்னை மாகாணத்தில் நீதிக்கட்சி ஆட்சி அமைத்தது.

தி. இலக்குமணார் (1864-1950) தமிழ்வழிக் கல்வி மற்றும் அறிவியல் கலைச்சொற்கள் உருவாக்கத்தில் பங்களித்தவர். தே. இலட்சுமணன் என்ற பெயரிலும் சிலர் நூல்களை வெளியிட்டுள்ளனர்.

தி. இலக்குமணார்/தே. இலட்சுமணன் எழுதிய நூல்கள் (பட்டியல்):

- ***பல்சுவைக் கட்டுரைகள்*** (1961)
- ***நான் கண்ட விழாக்கள்*** (1960)
- ***சிறுவர்களுக்கு ஒரு சில கதைகள்*** (1972)
- ***பழனி திருக்கோயில் வழிகாட்டி*** (1975)
- ***வேளாண்மைப் பல்கலைக்கழகம்*** (1985)

குறிப்பு: தே. இலட்சுமணன் எழுதிய பிற நூல்கள், தேசாந்திரி பதிப்பகம், அடையாளம் பதிப்பகம் போன்ற சுவடி புத்தக விற்பனையகங்களில் கிடைக்கின்றன.

(திருவிதாங்கூர் சம்ஸ்தானத்தில் பணியாற்றிய கல்வியாளர் இலட்சுமண பிள்ளை என்பவரே 'தி. இலக்குமணார்' என்று குறிப்பிடப்படுகிறார்.)

திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் வரலாற்றில், குறிப்பாக சமூகப் போராட்டம் மற்றும் நாடார் இன மக்களின் உரிமைகளுக்காகப் போராடியதில் **தி. இலக்குமணார்** (அல்லது தோழர். இலக்குமணார்) ஒரு முக்கிய பங்காற்றியுள்ளார்.

அவர் குறித்த முக்கிய தகவல்கள்:

- **பின்னணி:** திருவிதாங்கூர் சமஸ்தானத்தில், குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளில் தாழ்த்தப்பட்ட மற்றும் நாடார் இன மக்கள் மீது நிலவிய சாதிக் கொடுமைகள், சமூக கட்டுப்பாடுகளை எதிர்த்து போராடியவர்.
- **தோள் சீலைக் கலகம் (Channar Revolt):** திருவிதாங்கூரில் உயர்சாதியினர் அல்லாத பெண்கள் மேலாடை அணிய விதிக்கப்பட்ட தடையை எதிர்த்து, சாதி நிலக்கிழார்கள் மற்றும் அதிகார வர்க்கத்திற்கு எதிராக நடைபெற்ற தோள் சீலைக் கலகப் போராட்டங்களில் இவர் முக்கிய பங்கேற்றார்.
- **சமூகப் போராட்டங்கள்:** அக்காலத்தில் நிலவிய தீண்டாமை, காணாமை, நடவாமை போன்ற கொடுமைகளுக்கு எதிராகவும், தாழ்த்தப்பட்ட மக்கள் கோயில்களுக்குள் நுழைவதற்கும், பொதுச் சாலைகளில் நடப்பதற்கும் உரிமை கோரி போராடினார்.
- **பொருளாதார உரிமைகள்:** சாதிக் கட்டுப்பாடுகளால் பாதிக்கப்பட்ட மக்களின் பொருளாதார மேன்மைக்காகவும், ஆதிக்க சாதியினரால் விதிக்கப்பட்ட அபராதம் மற்றும் வரிச் சுமைகளுக்கு எதிராகவும் அவர் குரல் கொடுத்தார்.

சுருக்கமாகச் சொன்னால், திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் நிலவிய கொடுமையான சாதி அமைப்பிற்கு எதிராக சமூக நீதி வேண்டிப் போராடிய ஒரு வீரர் தி. இலக்குமணார்.

திருவிதாங்கூர் சாதிக் கொடுமைகள்

https://ta.wikipedia.org/wiki/%E0%AE%A4%E0%AE%BF%E0%AE%B0%E0%AF%81%E0%AE%B5%E0%AE%BF%E0%AE%A4%E0%AE%BE%E0%AE%99%E0%AF%8D%E0%AE%95%E0%AF%82%E0%AE%B0%E0%AF%8D_%E0%AE%9A%E0%AE%BE%E0%AE%A4%E0%AE%BF%E0%AE%95%E0%AF%8D_%E0%AE%95%E0%AF%8A%E0%AE%9F%E0%AF%81%E0%AE%AE%E0%AF%88%E0%AE%95%E0%AE%B3%E0%AF%8D

திருவிதாங்கூர் என்பது, இந்தியாவின் தற்காலக் கேரளா மாநிலத்தில் தென்பகுதிகளையும், தமிழ் நாட்டின், கன்னியாகுமரி மாவட்டத்தையும் உள்ளடக்கியிருந்த ஒரு சமஸ்தானம் ஆகும். இங்கு தீண்டாமை, காணாமை, நடவாமை, கல்லாமை போன்ற சமூக கட்டுப்பாடுகள் தாழ்த்தப்பட்டவர்கள் மேல் திணிக்கப்பட்டிருந்தது. அவையே **திருவிதாங்கூர் சாதிக் கொடுமைகள்** என்றழைக்கப்படுகின்றன. உயர் சாதியினர் வாழும் இடங்களில் கீழ்சாதியினரை விலக்கி வைத்தல், பொது குளங்கள், கிணறுகள், சந்தைகள், சாலைகள் ஆகியவற்றைப் பயன்படுத்தவதற்கும் இவர்களுக்கு தடை விதிக்கப் பட்டிருந்தது.

சமுதாயத்தில் இவர்களது கீழான நிலையை விளக்கும் வண்ணம் அவர்கள் அணியும் ஆடை, அணிகலன்கள், உபயோகிக்கும் பாண்டங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்துவதற்கு பலவிதமான விதிமுறைகள் கடைபிடிக்கக் கட்டாயப்படுத்தப்பட்டனர். இறைவழிபாடு செய்வதிலும் பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. சாதிக் கட்டுப்பாடுகளை மீறுபவர்களுக்கு கடுமையான தண்டனையும் வழங்கப்பட்டது. பொருளாதார ரீதியாகவும் பல கட்டுப்பாடுகள் அவர்கள் மீது திணிக்கப்பட்டன. அபராதம், வரி என்ற பெயர்களில் பல விதமான சுமைகள் அவர்கள் மீது ஏற்றப்பட்டன. இந்துக் கோவில்களுக்கும், சாதி நிலக்கிழார்களுக்கும் ஊதியமின்றி பணி செய்யக் கட்டாயப்படுத்தப்பட்டனர். கல்விக் கூடங்களில் அனுமதியும், அரசுப் பணிகளில் வாய்ப்பும் மறுக்கப்பட்டன. இதில் அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் தென் பகுதியில் வாழ்ந்து வந்த நாடார் இனத்தவராவர்.

சாதி வரிசை

இங்கு நம்பூதிரி பிராமணர்களான ஆரிய வம்சா வழியினர் சாதி வரிசையின் முதலிடத்திலும், நாட்டையாண்ட அரச பரம்பரையினர்களான சத்திரியர்கள் இரண்டாமிடத்திலும், வணிகத்தைத் தங்கள் தொழிலாக கொண்ட வைசியர்கள் மூன்றாமிடத்திலும், இம்மூவர்களுக்கும் ஏவல் தொழில் புரிந்து வந்த ஆரிய கலப்பின சூத்திரர்களான நாயர்கள் நான்காம் இடத்திலும் மனுதர்ம அடிப்படையில் வரிசைப் படுத்தப்பட்டனர். மேலும் நாடார் (சாணார்) மற்றும் ஈழவர் (தீயர்) பனை மரத் தொழில் செய்ததால் பிற்படுத்தப்பட்ரோக கருதப்பட்டனர். மற்ற பிற பூர்வக்குடி பழங்குடி மக்கள் தலித் அல்லது சண்டாளன் என்று அழைக்கப்பட்டனர்.

சமூகக் கட்டுப்பாடுகள்

ஒரு நம்பூதிரி பிராமணனுக்குப் பக்கத்தில் நாடாளுகின்ற சத்திரியர்கள் செல்லலாம். ஆனால் தொடக்கூடாது. மன்னனின் அருகில் சூத்திரர்களான நாயர்கள் செல்லலாம். ஆனால் தொடக்கூடாது. ஒரு நம்பூதிரியிடமிருந்து நாயர் இரண்டு அடித் தொலைவிலும், ஒரு நாடார் 12 அடி தொலைவிலும், ஒரு செறுமர் முப்பது அடி தொலைவிலும். ஒரு பறையர் அல்லது புலையர் 72 அடி தொலைவிலும் நிற்க வேண்டும் என்று கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டது. இல்லையென்றால் அவர்கள் தீண்டாமைக்கு ஆளாக்கப்படுவர். தீண்டத்தகாதவர்களுக்கு கோவிலில் சென்று இறை வழிபாடு மறுக்கப்பட்டிருந்தது. கோவில் தெருக்களில் நடக்க அனுமதி மறுக்கப்பட்டது. நாடார் இனத்தவர் அணியும் ஆடை அணிகலன்களிலும் கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. உயர் சாதியினரைப் போன்று குறிப்பாக நாயர் சாதியினரைப் போன்று ஆடை அணிய அனுமதிக்கப்படவில்லை. ஆண்களும், பெண்களும் கால் மூட்டுக்கு கீழும், இடைக்கு மேலும் ஆடை அணிய தடை விதிக்கப்பட்டிருந்தது. உயர் சாதியினர் முன் கீழ் சாதி பெண்கள் மார்பை மறைத்து ஆடை அணிந்து சென்றால் அது அவர்களை அவமதிக்கும் செயல் என்று உயர் சாதியினர் கருதினர். இக் கட்டுப்பாடுகளை மீறுபவர்கள் அடித்து துன்புறுத்தப்பட்டு அவர்கள் மேலாடைகள் கிழித்து எறியப் பட்டது. விலையுயர்ந்த ஆபரணங்களை அணியவும், குடை பிடிக்கவும், காலணி அணியவும், அனுமதி மறுக்கப்பட்டது. ஓடு வேய்ந்த வீடுகளில் வசிப்பதும், பால் கொடுக்கும் பசுக்கள் வளர்ப்பதும், வாகனங்கள் உபயோகிப்பதும் தடை செய்யப்பட்டிருந்தது. திருமண பந்தல்கள் அலங்காரம் மறுக்கப்பட்டது. பெண்கள் தண்ணீர் குடத்தை இடையில் சுமந்து செல்ல

அனுமதிக்கப்படவில்லை.[3] குடத்தை தலையில் வைத்து இருகைகளாலும் அதை தாங்கிப் பிடித்துச் செல்லவே அனுமதிக்கப்பட்டனர்.

சமயக் கட்டுப்பாடுகள்

இறைவழிபாடு செய்வதிலும், பலவிதக் கட்டுப்பாடுகள் கீழ்சாதியினர் என்று அடையாளப்படுத்தப்பட்டவர்களுக்கு விதிக்கப்பட்டிருந்தது. அரசும், உயர்சாதியினரும் நிர்வகித்து வந்த கோவில்களில் நுழையவோ, வழிபாடு நடத்தவோ, கோவில்களின் வெளிப் பிரகாரங்களில் செல்லவோ அவர்கள் அனுமதிக்கப்படவில்லை. தங்கள் வழிபாட்டிற்கென இவர்கள் எழுப்பிய கோவில்களில் கூட உயர்சாதியினர் வழிபடும் சிவன், பிரம்மா, விட்னு போன்ற தெய்வங்கள் வழிபட தடை விதிக்கப்பட்டிருந்தது. வீரபத்திரன், மாடன், சுடலை, வீரன், மாடசுவாமி, இருளன், முத்தாரம்மன், பத்ரக்காளி போன்ற தெய்வங்களையே இவர்கள் வழிபட்டனர். மதச்சடங்குகள் அனுசரிப்பதிலும் பலவிதக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. நெய், பால், போன்ற பொருட்களை வழிபாட்டில் பயன்படுத்த இவர்களுக்கு அனுமதியில்லை. கள், சாராயம் போன்ற பொருட்களை இவர்கள் பயன்படுத்தினர்.

பொருளாதாரக் கட்டுப்பாடுகள்

பொருளாதார ரீதியாகவும கீழ்சாதியினர் பல இன்னலுக்கு ஆளாகினர். அபராதம், வரி, நன்கொடை, என்ற பெயரில் வருமானத்தின் பெரும் பகுதியை அவர்கள் இழந்தனர்.

பிராயசித்தம்

தவறு செய்து தண்டிக்கப்பட்டவரகள் அரசுக்கு செலுத்திய அபராதத் தொகையே **பிராயச்சித்தம்** எனப்பட்டது. பிராயச்சித்தம் என்று பெயரில் தங்களுக்கு விருப்பமான தொகையை அரசு அதிகாரிகள் வசூலித்துக் கொள்ளலாம். வசூலிக்கப்பட்ட தொகையில் 20 விழுக்காடு தொகை போக மீதியை அரசுக் கருவூலங்களில் செலுத்த வேண்டும். இதனால் காரியக்காரர்கள் வசுலில் ஒரு பகுதியை மட்டும் கருவூலத்தில் செலுத்திவிட்டு மீதியை தங்களுக்கென வைத்துக் கொண்டனர்.

புருசந்தாரம்

பரம்பரை சொத்துக்கு உரிமையுடைய வாரிசுகளிடமிருந்து வசூலிக்கப்பட்ட வரி புருசந்தாரம் ஆகும்.இதன் படி சொத்து மதிப்பில் 40 விழுக்காடுக்கும் அதிகமான தொகையை அரசுக்கு வரியாக செலுத்த வேண்டும்.

பிராயசித்தத்தைப் போன்றே இந்த வரியிலும் ஒரு பகுதியை அதை வசூலித்த காரியக்காரர்களே வைத்துக் கொண்டனர்.

தலைவரி

நாடார் இனத்தவரை அதிகம் பாதிப்புள்ளாக்கிய மற்றொரு வரி தலைவரி (Poll tax) ஆகும். பதினாறு முதல் அறுபது வயது வரையுள்ள ஆண்கள் அனைவரிடமிருந்தும் இவ்வரி வசூலிக்கப்பட்டது. இறந்தவர்களுக்கும் இவ்வரியை உறவினர்கள் கொடுக்க வேண்டியிருந்தது. இவ்வரியை கொடுக்க முடியாத காரணத்தால் பலகுடும்பங்கள் அண்டைமாநிலமான தமிழ நாட்டிற்கு குடிபெயர்ந்தனர். அவ்வாறு குடிபெயர்ந்தவர்களின் உறவினர்களிடமிருந்தும் இவ்வரி வசூலிக்கப்பட்டது.

இதர வரிகள்

தலைவரியைத் தவிர தொழில் வரி, வீட்டு வரி, சொத்து வரி, என்று பல விதமான வரிகள் வசூலிக்கப்பட்டன. நாடார்கள் பனையேறுவதற்கு அவர்கள் பயன்படுத்திய ஏணிக்கு **ஏணிகாணம்** என்ற வரியும், தளைக்கு (தளை என்பது பனை ஏறும் தொழிலாளிகள் பனை ஏறும் போது கல்களில் அணிந்து கொள்ளும் பனை நாரினால் செய்யப்பட்ட வளையம்) **தளைகாணம்** என்ற வரியும் வசூலிக்கப்பட்டன. கள் தயாரிப்பவர்களிடமிருந்து ஒரு குடம் கள்ளிற்கு ஒரு நாளி கள் வீதம் வரியாக வசூலிக்கப்பட்டது.[14] ஒரு குடிசைக்கு ஒரு பணம் வீதம் குப்ப காச்சா(kuppa katch) என்ற வீட்டு வரியும் வசூலிக்கப்பட்டது. வீடுகளுக்கு கூரை மாற்றும் போது **மனை மேய்ப்பான் கொள்ளுமிறை** என்றொரு வரியும் வசூலிக்கப்பட்டது. அவர்களுக்கு சொந்தமான நிலங்களுக்கும் அங்கு வளர்கின்ற பனை, தென்னை, கமுகு, மா, பலா, புளி, புன்னை, இலுப்பை போன்ற மரங்களுக்கும் வரி கொடுக்க வேண்டும். திருமணமான பெண்களிடமிருந்து **தாலியிறை** வசூலிக்கப்பட்டது. சிலவகையான ஆடைகள் அணிவதற்கும், அணிகலன்கள் அணிவதற்கும், தலைப்பாகை அணிவதற்கு, குடைப் பிடிப்படதற்கு, பல்லக்கில் செல்வதற்கு, திருமணம் நடத்துவதற்கு என ஒவ்வொன்றிற்கும் அரசுக்குப் பணம் செலுத்தி அனுமதி பெற வேண்டும். அரசுக்கு சேர வேண்டியப் பணத்தைவிட பன்மடங்கு அதிகமாக அதிகாரிகள் வரி வசூலித்து வந்ததால், அதிலிருந்து விடுபட சம்பந்தப் பட்ட அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுத்தனர்.

வரி கொடுக்க தவறியவர்கள் கடுமையான தண்டனைகளுக்கு ஆளாக்கப்பட்டார்கள் முதுகில் பாரமான கற்கள் ஏற்றி வைத்து வெயிலில் பல மணி நேரம் நிற்க வைத்தல், பழுக்கக் காய்ச்சிய இரும்புக் கம்பியை காதில் நுழைத்து தொங்க விடுதல், சிறையிலடைத்துச் சித்திரவதை செய்தல் போன்றக் கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டார்கள்.

விருத்தி, ஊழியம்

உப்பளங்களிலிருந்து மண்டிகளுக்கும், விற்பனை நிலையங்களுக்கும் உப்பு மூடை சுமந்து செல்லுதல், அரசு பண்டகச் சாலைகளைப் பாதுகாத்தல், காடுகளிலிருந்து வெட்டிக் கொண்டு வரும் மரத்தடிகளைப் பாதுகாத்தல், யானைகளைப் பிடிக்கும் குழிகள், வெட்டிப் போடப்பட்ட காடுகளைப் பாதுகாத்தல் போன்ற வேலைகளை கீழ்சாதியினர் ஊதியமின்றி செய்ய கட்டாயப் படுத்தப்பட்டனர். தொடர்ந்து பல நாட்கள் இவ்வேலைகளைச் செய்யச் சொல்லி கட்டாயப்படுத்தியதால் பல குடும்பங்கள் நெருக்கடிகளைச் சந்தித்தது.

நிலங்களுக்கு வேலி அமைத்தல், வண்டிகளில் சுமைகளை ஏற்றி இறக்குதல், அரசனின் குதிரைகளுக்குப் புல் வெட்டிக் கொண்டு போடுதல், அரசுக் கட்டிடங்களைப் பழுது பார்த்தல், காவல் காத்தல் போன்ற வேலைகளை விருத்திக்காரர்கள் ஊதியம் பெறாமல் செய்து கொடுக்க வேண்டும். நாடார்கள் மாத்திரமே இவ்வேலையில் ஈடுபடுத்தப்பட்டனர். இலவசமாக வேலை செய்வதுடன் விருத்திக்காரர்கள் எழுதுவதற்கு தேவையான எழுத்தோலை, கோவில்களுக்கு தேவையான கருப்புக்கட்டி, எண்ணெய், பூமாலை, பால் போன்ற பொருட்களையும், ஊட்டுப் புரைகளுக்கு தேவையான விறகு மற்றும் காய்கறிகளையும், அரசு யானைகளின் தீவனத்திற்கான தென்னை ஓலைகள் ஆகியவற்றை இலவசமாக கொடுப்பதும் விருத்திக்காரர்களின் வேலையாகும். இவற்றைத் தவிர பண்டிகை நாட்களில் அரச குடும்பத்தினருக்கும், உயர் சாதியினருக்கும் கோழிகள், முட்டைகள், காய்கறிகள், பழங்கள் போன்றவற்றை இலவசமாக கொடுக்க வேண்டியிருந்தது.[15] மேலும் இந்தப் பொருட்களை திருவனந்தபுரத்திற்குத் தலைச்சுமையாகச் சுமந்து கொண்டு சேர்க்கவும் வேண்டும்.

காணொளிகள்

01] திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் பாண்டிய மறவர்கள்

https://www.youtube.com/watch?v=l4PeL4bd9Lo [4:47]

02] மார்புக்கு வரிவிதித்த திருவிதாங்கூர் சமஸ்தானம் | Breast tax history | Yean Documentary

https://www.youtube.com/watch?v=fx5QlIe2fjw [10:42]







